# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 29 திங்கட்கிழமை (15.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :262


# புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்துவதில் ஜனாதிபதி உறுதி!

## நோர்வே அனுசரணையாளருடன் அரசு விரைவில் பேச்சு நடத்தும்

கொழும்பு,ஓகஸ்ட்15

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் காத்திரமான திருத்தங்களைச் செய்வதில் ஜனாதிபதி உறுதியுடன் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் ஆலோசனைகளையும் நடத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் உடன்படிக்கையில் திருத்தங்களைச் செய்வதை ஜனாதிபதி விரைவுபடுத்த விரும்புகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுடன் அரசு விரைவில் உத்தியோகபூர்வமாகப் பேசவுள்ளது என்றும் கூறப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கொழும்பு 7 விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது வாசஸ்தலத்திற்கு நேற்றுச் சென்றிருந்தவேளை ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேசினர்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும், முக்கியமான பல விடயங்கள் குறித்தும் இருவரும் நீண்டநேரம் கலந்துரையாடினர். போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் முக்கியமான பலரை அரசாங்கம் இழந்துள்ளதால் இந்த நிலையைத் தொடர இடமளிக்கப்போவதில்லையென்று இச்சந்திப்பில் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி. புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தியமைப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசனையையும் அவர் கேட்டுள்ளார்.

நாட்டின் முக்கியமான கேந்திரநிலையங்கள் அமைந்திருக்கும் இடமொன்றில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை

முப்படைத் தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் அழைத்து நேற்று அவசர பாதுகாப்பு மாநாடொன்றை நடத்தியுள்ளார் ஜனாதிபதி.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பு நிலைமை குறித்தே அந்தக்கூட்டத்தில் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

எந்த அவசர நிலையிலும் படையதிகாரிகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் அஞ்சலி இல்லை!

கொழும்பு,ஓக.15

கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பூதவுடல் நேற்று நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவிருந்த போதும் இறுதி நேரத்தில் அந்த ஏற்பாடு கைவிடப்பட்டது.

பூதவுடலை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளி உட்பட நால்வர் அம்பாறையில் கைது!

மட்டக்களப்பு,ஓக.15

அம்பாறை மாவட்டம் காரைதீவில் அமைந்துள்ள தமது அலுவலகத்திற்குள் திடீரெனப் புகுந்த விசேட அதிரடிப்படையினர் அரசியல்துறைப் போராளி ஒருவரையும் மூன்று ஆதரவாளர்களையும் கைது செய்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

உதயமோகன் என்ற போராளியும் வேறு மூன்று பொதுமக்களுமே கைதானவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரின் இறுதிக்கிரியை இன்று தேசிய துக்கதினமாக அனுஷ்டிப்பு!

கொழும்பு,ஓக.15

கடந்த வெள்ளிக்கிழமை சினைப்பர் தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளன.

இறுதிக்கிரியை நடைபெறும் இன்றைய தினத்தை தேசிய துக்கதினமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதனை முழு அளவில் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறும், மதுபானசாலைகள், திரையரங்குகள் மற்றும் இறைச்சிக்கடைகளை மூடுமாறும் அரசு நேற்று அறிவித்தது. அரச அலுவலகங்கள், பாடசாலைகள் இன்று இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளை முன்னிட்டு கொழும்பு சுதந்திரசதுக்கம் மற்றும் அதனை அண்டிய வீதிகள் இன்று போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும். இறுதிச்சடங்கில் உலக நாடுகளின் தலைவர்கள் உட்படப் பல முக்கியஸ்தர்களும் கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் - பாலா நேற்று லண்டனில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஓக.15

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினார்.

லண்டன் நேரப்படி நேற்றுமாலை (இலங்கை நேரப்படி பின்னிரவு) இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரும் வழியில் ஹெல்கிஸன் லண்டன் சென்றிருந்தார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்து கொழும்பில் அரசியல் நிலைமை பதற்றமடைந்திருக்கின்றது என்று அவர் பால

(16ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை குறித்த விசாரணை வடக்கு - கிழக்கு பகுதிக்கும் விஸ்தரிப்பு

கொழும்பு,ஓக.15

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பான விசாரணை நடவடிக்கை வடக்கு - கிழக்குக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பில் மேற்கொள்ளப்பட்டதேடுதல் நடவடிக்கைகளில் மூன்று சிங்கள இளைஞர்கள் மற்றும் பெண்ணொருவர் உட்பட 28பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளவத்தையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் பதவி அநுரா பண்டாரநாயக்கவுக்கு?

கொழும்பு,ஓக.15

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவை அடுத்து ஏற்பட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சுப் பதவி வெற்றிடத்திற்கு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என அரச உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை, தற்போது வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராகக் கடமையாற்றும் டிரோன் பெர்னாண்டோவை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து, அவருக்கு வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை வழங்கலாமென்ற ஆலோசனை

(16ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு நகரிலுள்ள

## புலிகளின் அலுவலகம் மீது ஆறு கிரனேட்டுக்கள் வீச்சு!

பட்டிருப்பு,ஓக.15

மட்டக்களப்பு நகரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை மீது நேற்று நண்பகல் வேளையில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தாமரைக் கேணி வீதி, அரசடியில் உள்ள புளியந்தீவுக் கோட்ட அரசியல் அலுவலகமே தாக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் புலிகளின் அலுவலகம் மீது ஒன்றன்பின் ஒன்றாக 6 கிரனேட்டுக்களை வீசித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பின்னர் தப்பிச் சென்றுவிட்டனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலீஸ் அதிகாரி டங்கன் போல் தெரிவித்தார்.

வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் கண்டெடுக்கப்பட்டு பின்னர் பொலீஸாரினால் செயலிழக்கச் செய்யப்பட்டது. இந்தக் குண்டுத்தாக்குதலினால் அலுவலகத்துக்குப் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் இடம்பெற்றவேளை புலிகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடைசெய்யவேண்டும்; ஹெல உறுமய அரசிடம் வலியுறுத்து!

கொழும்பு,ஓக.15

விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும். பிரிட்டனில் தங்கியிருக்கும் புலிகளின் மதியுரைஞர்அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது மனைவியையும் அங்கிருந்து நாடு கடத்தவேண்டும். நோர்வேப் பிரதிநிதிகளை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும். கிளிநொச்சி,இரணைமடுவில் உள்ள புலிகளின் விமானத்தளம் அழித்தொழிக்கப்படல்வேண்டும்.

- இப்படி நான்கு கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்துள்ளது ஜாதிக ஹெல உறுமய. வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்தோரில்

# அச்சுவேலியில் குடியமர்த்தப்படவுள்ளோர் தொண்டைமானாறில் மீன்பிடிக்க அனுமதி!

## படையினர் வழங்கினர் என அரசஅதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியின் இரு மருங்கிலும் உள்ள அரச காணிகளில் குடியேற்றப்படவுள்ள மக்கள் தொண்டைமானாறு கடலில் மீன்பிடித் தொழிலை செய்வதற்கு யாழ். இராணுவத் தளபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் 500 குடும்பங்கள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் தங்கியுள்ளனர். அவர்கள் அச்சுவேலி, தொண்டைமானாறு வீதியில் உள்ள அரச காணிகளில் குடியமர்த்தப்படவுள்ளனர். தற்காலிக வீடு, மலசலகூட வசதிகள், நீர் வசதிகள் மற்றும் ஏனைய அத்தியாவசியத் தேவைகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர். ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் இந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளனர்.

அத்துடன், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினர் இந்தப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் பிரச்சினையையும் திண்மக் கழிவகற்றல் சம்பந்தமான பிரச்சினையையும் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இங்கு குடியமரும் மக்கள், தொண்டைமானாறு கடலில் கடற்றொழிலை மேற்கொள்ள யாழ். இராணுவத் தளபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், மீன்பிடியியல் சமாச சம்மேளனக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார்.

(ஓ-203-202)



காரைநகரில் அண்மைக்காலமாக கடும் காற்று வீசுகிறது. இக்காற்றினால் பனைகள் உட்பட பல மரங்கள் முறிந்து வீழ்கின்றன. காரைநகர் அல்லின் வீதியில் உள்ள க.கோபாலப்பிள்ளை என்பவரது வீட்டின் மீது கடும் காற்றினால் பனை மரம் முறிந்து வீழ்ந்து வீடு சேதமடைந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம் : காரைநகர் செய்தியாளர்)*

## சந்நிதியில் புதனன்று தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.15

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது ஆலயத் தேர் முற்றாக அழிக்கப்பட்டது. அதன்பின் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வழங்கிய நிதி உதவியுடன் புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டிருந்தது. அத்தேரின் வெள்ளோட்டமே இடம்பெறவுள்ளது. (203)

## நல்லூர்த் திருவிழா நேரடி ஒலிபரப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

உலகத் தமிழர் வானொலி சேவையினர் நல்லூர்த் திருவிழாக் கால நிகழ்வை இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஒலிபரப்புச் செய்யவுள்ளனர்.

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இருந்து இந்த நேரடி ஒலிபரப்புச் சேவை இடம்பெறும். (எ-203-202)

# நல்லூர்த் திருவிழாவின்போது பணியாற்ற பொலீஸாருக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்

## தலைமையகப் பணிப்புரை காரணமாம்

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் பொலீஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதில் சிக்கல் எழுந்துள்ளதாகவும் - பொலீஸ் தலைமையகம் விடுத்துள்ள பணிப்புரையே இதற்குக் காரணம் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சமீபத்தில் யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் இணுவில் பகுதியில் கடத்தப்பட்டார். பின்னர் அவரது சடலம் மீட்கப்பட்டது. இந்தச் சம்பவத்தையடுத்து, குடாநாட்டில் பொலீஸாரின் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவதற்கான பணிப்புரையை பொலீஸ் தலைமையகம் விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி யாழ். குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களில் கடமை புரிகின்ற பொலீஸார் அவசியமேற்பட்டாலேயேயன்றி வீதிகளில் நடமாடுவதைக் குறைக்கவேண்டும் என்றும் -

வெளியே செல்ல அவசியமேற்பட்டால் தனியாகச் செல்லாமல் ஆயுதங்களுடன் சில பொலீஸார் சேர்ந்து செல்லவேண்டும் என்றும் - பொலீஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

வீதிச் சோதனை போன்ற நடவடிக்கைகளுக்குச் செல்லும்போது இராணுவத்தினரின் பாதுகாப்புடன் செல்லவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நல்லூர் பெருந்திருவிழாவின் போது ஆலயச் சுற்றாடலில் கடமைபுரிவதில் பொலீஸாருக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

பொலீஸார் வெளியிடங்களுக்கு ஆயுதங்களுடனேயே செல்லும்படி பொலீஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளதாகவும் -

ஆனால், ஆலயச் சூழலில் ஆயுதங்களுடன் கடமை புரிவதில் பொலீஸார் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

பொலீஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உற்சவ காலத்தில் கடமைபுரிவதற்காக வவுனியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சுமார் 70 பொலீஸார் யாழ். பொலீஸ் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் பொலீஸார் நேற்று வாகனச் சோதனைகளை மேற்கொண்டனர்.

(ஓ-7-86)

# சட்டவிரோத மது விற்பனைக்கு எதிராக கலாசாரம் பேணுவோர் நடவடிக்கை

அரியாலை,ஓக.15

நீர்வேலிப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்பாக கலாசாரம் பேணும் இளைஞர்கள் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அறியவருகிறது.

சட்டவிரோதமாக இயங்கிவந்த இந்த மதுபான விற்பனை நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்ட மதுபானங்கள் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் குழுவினரால் கைப்பற்றப்பட்டதாகவும் -

சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

இதேசமயம் -

இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு மின்சாரம் பெறுவோரினால் இப்பகுதியில் இரவு நேரங்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகவும் இதனால், மக்கள் அசௌகரியங்களுக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-17)

# தனியே வீட்டிலிருந்த பெண்ணிடம் பட்டப்பகலில் நகைகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம் ஓக.15

வீட்டில் தனியே இருந்த குடும்பப் பெண்ணைக் கட்டிப்போட்ட திருடர்கள் அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பியோடினர். பட்டப்பகலில் இச் சம்பவம் கொக்குவில் மேற்கில் இடம்பெற்றுள்ளது.

திருமதி சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி என்பவரது வீட்டிற்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்தனர்.

அவர்கள் மங்கையர்க்கரசியிடம் இங்கு பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியுள்ளனரா? எனக் கேட்டனர். அதற்கு, மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுவிட்டனர் என்று அப்பெண்மணி பதிலளித்தார்.

அப்போது அந்த இளைஞர்கள் குறிப்பிட்ட மாணவர்கள் தவறானவர்கள் என்பதால் அவர்களை வீட்டில் வைத்திருக்க வேண்டாமென்று அப்பெண்மணியிடம் கூறிவிட்டு தாகத்திற்கு தண்ணீர் கேட்டனர். உள்ளே தண்ணீர் எடுக்கச்சென்ற பெண்மணியை பின் தொடர்ந்து சென்ற இளைஞர்கள் அவரைத் தாக்கி வாயில் துணியை அடைத்து கைகளையும் கட்டிவிட்டு அவர் அணிந்திருந்த நகைகளைப் பறித்துச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ- 203)

### மேல்கொத்மலைத் திட்டத்தைக் கைவிடக் கோரிய

# இளைஞர்கள் உண்ணாவிரதம் நேற்று தற்காலிகமாக நிறுத்தம்

மேல்கொத்மலை நீர்மின் திட்டத்தைக் கைவிடக்கோரி மலையக இளைஞர்கள் 6 பேர் மேற்கொண்டுவந்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டிருக்கும் நாட்டின் தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டும் -

மேல்கொத்மலைத்திட்டம் குறித்து பேச்சு நடத்த நாளை செவ்வாய்க்கிழமை வருமாறு மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு இளைஞர்களுக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளதையடுத்தும் - போராட்டம் இடைநிறுத்தப்படுகின்றது என்று நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டது.

மலையக இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் அந்த மன்றத்தைச் சேர்ந்த 6 இளைஞர்கள் கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு அழைப்பு விடுத்துள்ள நாளைய கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்வர் என்றும் இளைஞர்கள் தெரிவித்தனர்.

(க-ரி)




# ஏ-9 பாதை ஓமந்தையில் நேற்றும் சிலமணி நேரம் மூடப்பட்டது

வவுனியா, ஓக.15

ஏ-9 கண்டி வீதியூடான போக்குவரத்து நேற்றும் சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் சுமார் அரைநாள் இப்பாதையூடான போக்குவரத்தைப் படையினர் தடைசெய்திருந்தனர்.

நேற்றுக்காலை வழமைபோன்று ஏ-9 பாதையூடான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கிய படையினர், திடீரென காலை 10 மணியளவில் வீதியை மூடி போக்குவரத்தைத் தடைசெய்தனர்.

ஓமந்தை சோதனைச்சாவடிக்குச் சென்ற மக்களையும் வாகனங்களையும் அவர்கள் தாண்டிக்குளத்துக்குத் திருப்பி அனுப்பினர். சுமார் இரண்டரை மணி நேரம் இந்த நிலை நீடித்தது. வன்னி மற்றும் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல வந்த பயணிகள் இதனால் பெருஞ் சிரமங்களுக்கு உள்ளானார்கள். பொருள்களுடன் வந்த வாகனங்களும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

நிலைமையை அறிந்து அங்கு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு பேசினார். அதனையடுத்தே, பாதையைத் திறந்துவிட்ட படையினர் போக்குவரத்துக்கும் அனுமதி வழங்கினர்.

ஓமந்தையின் மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் பாதையை மூடிவிட்டார்கள் என்றும் அதனாலேயே தாமும் போக்குவரத்தைத் தடைசெய்தனர் என்றும் கிஷோர் எம்.பியிடம் தெரிவித்துள்ளனர் படையினர்.

இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். நேற்று எச்சந்தர்ப்பத்திலும் தாம் வீதியை மூடவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். விடுதலைப் புலிகள் மீது அவதூறை ஏற்படுத்துவதற்காக படையினர் இவ்வாறான கருத்துகளைப் பரப்பிவருகிறார்கள் என்று புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார். (க-ரி)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அவசரகால நிலைப் பிரகடனம் எதற்காக?

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிச் சடங்குகள் இன்று கொழும்பில் நடைபெறுகின்றன. அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக - உயர்தலைவருக்குரிய நிலையில் வைத்து அரச மரியாதைகளுடன் - சுதந்திர சதுக்கத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இன்றைய தினம் தேசிய துக்க தினமாகவும் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் - அரசாங்கத்தின் - பிரதமர் , ஜனாதிபதி போன்ற மிக உயர்ந்த தலைவர்களுக்குச் செய்யப்படும் அனைத்து மரியாதையும், கௌரவமும் அமரர் கதிர்காமருக்கு வழங்கப்படுகிறது. ஆட்சியில் உள்ள அரசாங்கத்தையும் ஜனாதிபதி சந்திரிகாவையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பொறுத்த வரையில் , அமைச்சர் கதிர்காமர் செய்த சேவைக்கு நன்றிக்கடனாக இந்த மரியாதை செலுத்தப்படுவது மிகவும் பொருத்தமானதே. அதற்கான எல்லாத் தகுதிகளும் அவருக்கு உண்டு. அமைச்சர் கதிர்காமர் செய்த சேவைக்கு அரசாங்கம் செய்யும் பிரதி உபகாரங்களில் இதுவும் ஒன்று எனக்கொள்ளலாம்.

அமைச்சர் கதிர்காமரின் படுகொலை நடந்த கையோடு, நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. கால எல்லை குறிப்பிடப்படாமல் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டமை பொருத்தமானதா?

பிரசித்திபெற்ற ஓர் அரசியல் தலைவரின் படுகொலையைச் செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது மிக அவசியம். அதன் பொருட்டு நாட்டின் பாதுகாப்புநிலை குழம்பிப் போகாமல் இருக்கவும் -

கொலையாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அதற்கான செயற்பாடுகளில் பொலீஸாரும் படையினரும் ஈடுபடுவதற்குரிய சட்டபூர்வமான அதிகாரங்களை வழங்குவதற்கும் - அவசரகால நிலைமைப் பிரகடனம் தேவைப்படலாம்.

ஆனால், கால வரையறையற்ற அவசரகால நிலைப் பிரகடனத்துக்கான தேவை என்ன? அமைச்சர் கதிர்காமரின் படுகொலையைச் சந்தர்ப்பமாகக் கொண்டு - அதனைச் சாட்டாக வைத்து - நாட்டில் வன்செயல்கள் வெடிக்கும் என்று அரச உயர் மட்டம் கருதியதா?

படுகொலைச் சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவுமே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

சரி. படுகொலை நடைபெற்ற கொழும்பு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சில நாள்களுக்கென மட்டும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பின் அதனை நியாயமானதாகக் கருதமுடியும்.

ஆனால், காலவரையறையற்ற அவசரகால நிலை எதற்காக? அதற்கான உண்மையான உள்நோக்கம் என்ன என்று பல கேள்விகள் இயல்பாகவே எழுந்து நிற்கின்றன.

படுகொலை குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே அவசரகால நிலைப் பிரகடனம் என்பது, ஜனாதிபதியின் வாதம். ஆனால், அதே அவசரகால நிலையின் கீழ் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற மக்கள் நலன்களுக்கு விரோதமானவற்றையும் நடைமுறைப்படுத்த அரசுக்கு வசதி உண்டு. பல வருடங்கள் அமுலில் இருந்த மேற்சொன்ன சட்டத்தினால் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சொல்லுந்தரமன்று.

போர் நிறுத்த ஒப்பந்தம் இப்போது நடைமுறையில் உள்ளது. அது எப்போது முறியும் என்ற நிலைமை நாளாந்தம் முற்றிக்கொண்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில், அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதால் போர் நிறுத்தம் உடைந்து போகலாம் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்வோருக்கும் காரண காரியம் எதுவும் தெரிவிக்கப்படாமலே சோதனை, முற்றுகை, கைது, கைதான பின்னர் சித்திரவதை என்று பலவித பழைய கொடூரங்கள் தம்மீது கட்டவிழ்த்து விடப்படலாம் என்ற அச்சமும் மனப் பதற்றமும் உண்டு.

ஓர் உதாரணம் -

வடக்கிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் பயணம் செய்யும் மக்களின் போக்குவரத்து உரிமை, அவசரகால நிலையின் கீழ், கடந்த இரண்டு நாள்களில் பல மணிநேரம் மறுக்கப்பட்டது; பறிக்கப்பட்டது.

இதேபோன்று சொல்லாமல் கொள்ளாமல், முன்னறிவித்தல் எதுவுமின்றி, உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் செய்யப்படாமலேயே, அவர்களின் ஏனைய அடிப்படை உரிமைகளும் பறிக்கப்படக்கூடும்.

அதிகாரம் படையினர் வசம் சேர்ந்தால், அதனால் தமக்கு உண்டாகக் கூடிய பாதிப்புகள் எவை எவை என்ற அனுபவப் பட்டியலைத் தமிழர்கள் மறக்கவில்லை; மறக்கவும்முடியாது.

இதேவேளை, தெற்கில் தேர்தல் காலம் நெருங்குகிறது. அதனால் உண்டாகக்கூடிய சிக்கல்களிலிருந்து தப்புவதற்காக, அரசு தெற்கில் அரசியல் தலைவர்களைக் கைதுசெய்வதற்குக் கூட அவசரகால நிலை உதவக்கூடும். தனது அரசியல் லாபம் கருதிய செயற்பாடுகளில் இறங்குவதற்கு அவசரகால நிலையை அரசு தனது கையில் எடுத்துக்கொள்ளும் வாய்ப்புக்கூட உண்டு.

மொத்தத்தில், அமைச்சர் கதிர்காமரின் கொலை எந்தளவு கொடுமையானதோ, அதனைவிடவும் பல மடங்கு கொடுமையானது அரசின் அவசரகால நிலைப் பிரகடனம்.

மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு முற்றிலும் விரோதமானது, எதிரானது .

ஆகையால், சனிக்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகம் இல்லை. அந்த உள்நோக்கம் சில நாள்களில் அம்பலமாகக் கூடும் .

அதுவரை பொறுத்திருக்காது, மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையுள்ள நிறுவனங்கள் நாடளாவிய ரீதியில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க முன்னிற்கவேண்டும்.

# அமைதி முயற்சியின் முக்கியமான கட்டத்தில் கதிர்காமரின் கொலை இடம்பெற்றுள்ளது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுதாபம்

கொழும்பு,ஓக.15

வெளிநாட்டமைச்சர் லக்ஷமன் கதிர்காமரின் படுகொலை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் அதிர்ச்சியை வெளியிட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கதிர்காமரின் படுகொலையை ஆட்சேபித்திருப்பதுடன், அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்குத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

அமைதி முயற்சியின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் கதிர்காமரின் கொலை இடம்பெற்றுள்ளது. கடந்த பல மாதங்களாக இடம்பெற்றுவந்துள்ள படுகொலைகள் போர்நிறுத்த உடன்பாட்டினை மோசமாகப் பாதிப்பவையாக இருந்துள்ளன. போர்நிறுத்தம் தொடர்ந்து பேணப்படாவிடில் அமைதிச் செயற்பாடுகளை மீளவும் தொடங்க முடியாமல் போய்விடக்கூடும்.

அமைதிப் பேச்சுகள் அர்த்தமுள்ள விதத்தில் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

அமைதிச் செயற்பாடுகளில் ஏற்படும் தேக்கமும் இழுத்தடிப்பும் அதனை முறியடிக்க முயலும் தரப்பினருக்கு ஊக்கமளிப்பதாக இருப்பதுடன் வன்முறைச் சூழல்களைத் தோற்றுவிப்பதாகவும் அமையும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் சார்பில் ஆர்.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ப)

## அவசரகால நிலைப் பிரகடனத்தை மனித உரிமைக் குழு கண்டிக்கிறது

கொழும்பு,ஓக. 15

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்குப்பின்னர் இலங்கை அரசு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளதற்கு ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியத் தலைநகர் புதுடில்லியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் இயக்குநர் சுகாஸ் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்ட நிகழ்வு ஒரு கொடும் நிகழ்வுதான். ஆனால், விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியிருப்பதும் மற்றொரு கொடும் நிகழ்வுதான்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. கொலையாளிகளைப் பிடிப்பதற்காக ஊரடங்கு, கொழும்பை மூடிவிட்டுத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற சட்டபூர்வமான நடவடிக்கைகளை வேண்டுமானால் அரசு மேற்கொள்ளலாம்.

இந்த அவசரகாலநிலைப் பிரகடனம் மக்களிடையே விரோத மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடும். இந்தப் பிரகடனம் இலங்கை அரசும் பங்கேற்றுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்பின் விதிகளுக்கு எதிரானது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

(ஐ-ஒ)

## அவசர அபிவிருத்திப் பணிகளை ஒக்ரோபருக்குள் பூர்த்திசெய்யப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அவசர அபிவிருத்தித் திட்ட வேலைகள் அனைத்தும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் நிறைவேற்றப்படவேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தியுள்ளார்.

அபிவிருத்தி வேலைத் திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த வியாழனன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் கருத்துத் தெரிவித்தபோது;

புனர்வாழ்வு அமைச்சு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கென 105 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி மூலம் கல்வித் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், பிரதேச சபை, விவ சாயத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், மாவட்ட செயலகம் ஆகியவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

தற்போது மேற்படி அபிவிருத்தி வேலைகளில் 90 வீதமானவை ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இந்த அபிவிருத்தி வேலைகள் அனைத்தையும் எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் செய்து முடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன் - என்றார்.

(எ-202-203)

## காக்கைதீவில் புதிய கொல்களம்

காக்கைதீவில் புதிதாக கொல்களம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான இடத்தெரிவினை சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் மேற்கொண்டுள்ளனர். புதிய கொல்களம், 2005 ஆம் ஆண்டின் குறித்தொகுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

(எ-185)

## வரலாற்றுக் கண்காட்சி

தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து கண்காட்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.நிலவன் ஏற்றிவைத்தார்.

கண்காட்சி மண்டபத்தை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச மேலாளர் மோகன் திறந்துவைத்தார்.

இக்கண்காட்சியில் தமிழரின் தொன்மை வரலாறு, அகழ்வுச் சான்றுகள், போராட்ட வரலாறு, ஸ்ரீலங்கா, இந்தியப் படைகளின் படுகொலைகள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றின் ஆவணங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியில் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன், மருதங்கேணி இ.த.க. பாடசாலை அதிபர் மா.நவநீதமணி, மருதங்கேணிக் கோட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அண்ணாத்துரை ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-202)

# கிழக்கு நிலைமை மேலும் மோசமடைந்தே செல்கிறது

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.15

கிழக்குப் பகுதி மிகவும் நெருக்கடியான நிலைமைக்குள் வந்துள்ளது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் அவர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி: கிழக்கில் நிலைமை சீராகியுள்ளதா?

பதில்: கிழக்கு நிலைமை மிகவும் நெருக்கடியான நிலைமைகளுக்கு வந்துள்ளது. அங்கு ஆயுதக் குழுக்களின் அட்டகாசம், அவர்களின் செயற்பாடு, இராணுவமும் ஆயுதக்குழுக்களும் இணைந்து மேற்கொள்ளும் செயல்கள் என்பன அண்மைக்காலத்தில் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எங்கள் போராளிகள் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து நடக்கும் சம்பவங்கள், அவர்கள் மீது நடக்கும் தாக்குதல்கள் இவை எல்லாம் அங்கே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி யுத்த சூழலுக்குள் கிழக்கை வைத்திருப்பது தான் அவர்களது நோக்கமாக இருக்கின்றது. அதனை அவர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கேள்வி: கிழக்கிற்குப் பொறுப்பாக இருந்த புலனாய்வு இராணுவ அதிகாரியை மாற்றியதன் மூலம் ஜனாதிபதி கிழக்கின் நிலைமையைத் தணியச் செய்துள்ளதாகக் காட்ட முனைந்துள்ளார். அதுகுறித்து...?

பதில்: அது அவர்களது உள்ளகத் தேவை கருதியே தவிர ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கே, யுத்த நிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாவதைத் தவிர்ப்பதற்காகவோ செய்யப்பட்ட நடவடிக்கை அல்ல. அந்த அதிகாரியை மாற்றிய பின்னர்தான் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது. ஆகவே, அவர்களுக்கு யுத்த சூழலைப் பாதுகாக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

கேள்வி: போராளிகளின் போக்குவரத்தின்போது அவர்களோடு இராணுவம் கூடச் செல்லவேண்டும் என்ற ஏற்பாடு இருக்கிறதல்லவா! அது பற்றி....?

பதில்: போக்குவரத்து சம்பந்தமாகச் சில சாதகமான சமிக்ஞைகள் காட்டப்பட்டுள்ளன. இன்னும் ஒரு சில விடயங்களில் முடிவெடுக்க வேண்டியிருப்பதால் அது தொடர்பான இறுதி முடிவை நாங்கள் கண்காணிப்புக் குழுவிடம் கடிதமூலம் கேட்டுள்ளோம்.

(ஐ-3-203)

### நாளை

ஆடி 31
செவ்வாய்க்கிழமை
16.08.2005
திதி: ஏகாதசி
முற்பகல் 10.02 வரை
நட்சத்திரம்: மூலம்
பிற்பகல்: 01.50 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்தே தீரும்.
-சுவாமி விவேகானந்தர்.

## வெல்லுங்கள்! அளப்பரிய பரிசில்கள்!!

டயலொக்

kit

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim (CONNECTION) இணைப்புகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்.

எந்நேரமும் உன்னுடன்...

சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு, வெளி நாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்மூலம்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் எமது வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய பரிசில்கள்!

நாடுங்கள்: **Sri Murugan**

**Tele Communication & Agency Post Office,**

303, K.K.S. Road, Jaffna.

T.P.: 021 222 5392, Fax: 222 3214

(சி-38336) (24-11-18)


## St.John's College, Jaffna

### Old Boys Association
### Annual General Meeting

The above Proposed meeting will be held on Saturday 20th August 2005 in the College auditorium.

Agenda

- 7.30 a.m. Service - St.John The Baptist Church
- 8.30 a.m. Break - fast
- 9.15 a.m. Meeting and election
- 10.30 a.m. Cricket Match
- 1.30 p.m. Lunch
- 4.30 p.m. Principal's Tea (Jubilee Hall)
- 5.00 p.m. Soccer match (Old boys vs present boys)

*Break - fast and lunch tickets available at the College Office, till 18th August.*

Sgd.S.Thanapalan,
Principal.

Sgd. A.Navaneethakrishnan,
Gen.Secretary.

(C/44099)(26-)


## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை.

எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே. ரூறிஸ்ற் இன்,**

இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373.

## மானிப்பாய் மற்றும் கோப்பாயில்

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி

## இலவச அறிமுக உரை

16ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 6.00 மணி ஹர்லொக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில், யாழ் வீதி மானிப்பாய்.

15ஆம் திகதி திங்கட்கிழமைமாலை 6.00 மணி யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

மேலும் தொடர்புகளுக்கு:- 077 9059549 - 077 9059544

## ஜோதிடம்

**Pandit Kr. Luxumy Narasimha**

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடர் தூர்க்கா... சக்தி ஜோதிட இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் -மனைவி பகை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமை தீர்வு/ வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பல்வேறான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கும் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **சிறி சவ்பாக்கிய இன்**

விருந்தினர் விடுதி,
235/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 6779, 077 9233070

(38503) (26,11.18.24)


## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தென்மேற்கு, ஒக.15

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச விவசாய குழுக் கூட்டம் ஆகியன எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும்.

இதில் கலந்துகொள்ளுமாறு திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் சம்மேளனங்களின் தலைவர்கள் ஆகியோருக்குப் பிரதேச செயலகம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

(எ-135)


## தேவை

### சந்தைப்படுத்தல் அதிகாரி

உப உணவுப் பொருள்கள் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.மாவட்டத்தில் சந்தைப் படுத்தும் அதிகாரி தேவை. சந்தைப்படுத்தலில் அனுபவம் உள்ளவரும், விஞ்ஞானத்துறையில் கற்றவரும், வயது எல்லை 30-45இற்கு இடைப்பட்டவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் மற்றும் இதர வசதிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொருத்தமானவர்கள் 14 நாள்களுக்குள் உறவினர் அல்லாதோர் இருவரினால் சிபாரிசு செய்யப்பட்ட சுயவிவரக்கோவையுடன் கீழ் வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். நேர்முகத் தெரிவு கொழும்புத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

**The Advertiser**
**No.15, STAMBOUL PLACE,**
**COLOMBO-03.**

(C/38335)



## இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா!

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



**இ. பிரதீபன்**
**மாவிட்டபுரம்.**

2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில் ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐத் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப்படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.



**அ.அஜந்தா**
**யாழ்ப்பாணம்**

நான் தற்பொழுது IIS இல் HND 4வது பிரிவு மாணவி. யாழ் இந்து மகளிர் கல்லூரியின் 2002 உயர்தர கணிதப்பிரிவு மாணவியாகிய நான் சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைத் தவறவிட்டேன். இந்நிலையில் யாது செய்வதென அறியாதிருந்த எனக்கு IIS நிறுவனம் ஓர் கலங்கரை விளக்குப்போல் காட்சியளித்தது. சர்வதேச தரம்மிக்க பிரித்தானிய சான்றிதழுக்கான Edexcel இன் BTEC HND கற்கைநெறியில் இணைந்து கொண்டதன் மூலம் எனது பெற்றோர் ஒளிமயமான என்னெதிர் காலத்திற்கு வித்திட்டுள்ளனர். எனது எதிர்காலம் தொடர்பான ஓர் தெளிவான நிலையில் தற்பொழுது நான் இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. 1½ வருட இக்கற்கைநெறியை முடித்துக் கொண்டதும் எனது 3ம் ஆண்டுப் பட்டக்கல்வியை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதன் மூலம் ஓர் மிகக்குறுகிய காலத்தில் கணனித் துறையில் பட்டதாரியாகும் வாய்ப்பினை IIS நிறுவனம் ஏற்படுத்தித் தந்ததையிட்டு நானும் எனது பெற்றோரும் மனநிறைவடைகின்றோம்.

## BTEC HND

World Class Qualifications

*Delivered Locally....... Recognised Globally*

**B.Sc ( Hons ) / BEng ( Hons )**
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

**BTEC HND**
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

**GCE A/L**
with 2 Subjects

பிரிவு II க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

edexcel INTERNATIONAL

Approved Training Centre

SUCCESS THROUGH KNOWLEDGE

## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாசிலாமணி முத்துவேலு (மணியம்மா)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் தற்பொழுது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாசிலாமணி முத்துவேலு அவர்கள் லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை (பொந்து வேலுப்பிள்ளை) - செல்லாச்சி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற கந்தோர் உதவியாளர் ஆறுமுகம் முத்துவேலு (சுதுமலை) அவர்களின் அன்பு மனைவியும் வைத்திய கலாநிதி மகேஸ்வரி (லண்டன்), திருமதி சோமசுந்தரி சிவலிங்கம் (பபா - லண்டன்), பாலகிருஷ்ணன் (கணக்காளர், நியூசிலாந்து) ஆகியோர்களின் பாசமுள்ள தாயும் திருமதி சிவயோகவதி மகேஸ்வரன் (லண்டன்), வைத்திய கலாநிதி சி.சிவலிங்கம் (லண்டன்), திருமதி மகாலட்சுமி பாலகிருஷ்ணன் (நியூசிலாந்து) ஆகியோர்களின் பிரியமுள்ள மாமியாரும் செல்வி காயத்திரி, திருமதி பாஸ்கரி தயாளன், திருமதி யசோதினி கஜன், திருமதி ரேணுகா ஸ்கந்தகுமார், திருமதி பாமினி குகேந்திரன், திருமதி வித்தியா பிறவுண் முதலானவர்களின் மதிப்பார்ந்த பேர்த்தியும் சந்துரு, சந்தியா, இமானி, அஸ்வினி, அர்ஜன், அஞ்சலி, அமரன், அமலா ஆகியோர்களின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியை இன்று (15.08.2005) திங்கட்கிழமை மு.ப.11 மணி 30 நிமிடமளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்களையும், நண்பர்களையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

'சுந்தரி வாசம்'
உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்.
(இலங்கை)

தகவல்:
DR.M.MAHESWARAN
MRS.SOMASUNTHARY SIVALINGAM
M.BALAKRISHNAN ACCOUNTANT
27, ABBOTSWOOD GARDENS,
ILFORD ESSEX,
U.K.
T.P.:-0044-2085505139

(38887) (24-11-18)

### தவராசா சுகந்தன்

(காசாளர், நகரசபை, வல்வெட்டித்துறை)



சீனட்டி, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சுகந்தன் சனிக்கிழமை (13.08.2005) அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தவராசா - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், வடிவானந்தம் (குஞ்சு) - தவஞானசரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் கார்த்திகாவின் (கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் திகழவனின் பாசமிகு தந்தையும் சுஜாதா (கனடா), சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தா(தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), தேசிகன் (மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி), நகுலேஸ்வரன் (கனடா), ஹேமானந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தேனுகாவின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2005) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
(நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக)
திருநெல்வேலி
தொலைபேசி இல.0773068868
0777286128

தகவல்:
குடும்பத்தினர்

(38880)
(24-11-18)



முல்லைத்தீவு கிராம அபிவிருத்தி வங்கியின் நம்பிக்கை ஒளி கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் முள்ளியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை பயனாளி ஒருவருக்குக் கடன் வழங்குவதையும் 'நம்பிக்கை ஒளி' கடன் திட்ட நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# நாகேந்திரபுரத்தில் சிறப்புற நடந்த பெண்கள் சங்கமம் நிகழ்வு

பரந்தன்,ஓக.15

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் சமகால அரசியல் நிலை குறித்த 'பெண்கள் சங்கமம்' நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 9 ஆம் திகதி நாகேந்திரபுரம் கிராமத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டபெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரை நாகேந்திரபுரம் மாதர் சங்கத் தலைவி கு.கனகம்மாவும் நாகேந்திரபுரம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கோ.உதயகுமாரும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி காசிநாதன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாகேந்திரபுரம் கிராம மக்கள் எழுச்சி செயலணிக் குழுத் தலைவர் சி.ரஜனிகாந் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர். (எ-352-203)

# முல்லை விளை நிலங்களில் மண்பரிசோதனை ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக.15

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விளை நிலங்களில் மண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத்திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனையும் இணைந்து இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன், இப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் உள்ள தண்ணீரும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக கடல்நீர் நிலப்பகுதிக்குள் உட்புகுந்தமையால் விளை நிலத்திலும், நிலத்தடி நீரிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இனங்காண்பதற்காகவே இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

(எ-352-203)

# வீட்டுத் தோட்டச் செய்கையாளரை ஊக்குவிக்க உடையார்கட்டில் உதவிகள்

பரந்தன்,ஓக.15

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார் கட்டு மற்றும் விசுவமடு பிரதேசத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையாளரை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த உதவிகளை வழங்கிவருகிறது.

உடையார்கட்டு வடக்கு, தெற்கு, விசுவமடு மேற்கு, கிழக்கு வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், சுதந்திரபுரம் கிராமங்களைச் சேர்ந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, உற்பத்திக்கான உதவு பொருள்கள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவிப் பொருள்கள் இலவசமாக வழங்கப்பட்டன என்றும் - கூறப்பட்டது. (எ-352-204)

## மயில்வாகனபுரத்தில் இரண்டு வீடுகள் தீயினால் நாசம்

பரந்தன்,ஓக.15

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மயில்வாகனபுரம் கிராமத்திலுள்ள இரு வீடுகள் தீப்பற்றி எரிந்துள்ளன.

இப்பகுதியில் உள்ள இணுக்கு புல்லுக்கு நெருப்பு வைத்தபோது காற்றில் பரவிய தீ, வீடுகளில் பற்றியுள்ளது- இதனால் கிடுகுகளினால் வேயப்பட்டிருந்த இருவீடுகளும் முற்றாக எரிந்து நாசமாகின.

திருமதி எஸ்.லீலா மற்றும் சி.சிவகுமார் ஆகியோரது வீடுகளே இவ்வாறு தீப்பற்றி எரிந்தன.

சம்பவம் இடம்பெற்றபோது வீட்டில் எவரும் இல்லாததால், விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், வீட்டிலுள்ள பொருள்கள் அனைத்தும் எரிந்து சம்பராகி விட்டன. சம்பவத்தை அறிந்த தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கினர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கண்டாவளை பிரதேச உதவிப்பணிப்பாளர் நா.கீதன், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் க.சண்முகவேலாயுதம், ஆகியோர் உதவிப் பொருள்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்றனர். (எ-352-204)

## விசுவமடு மகாவித்தியாலயத்தில் இருமாடிக்கட்டடத்துக்கு அடிக்கல்

பரந்தன்,ஓக15

விசுவமடு மகாவித்தியாலயத்திற்கு 71 லட்சம் ரூபா செலவில் இருமாடிக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இக் கட்டடத்திற்கு அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி வித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் கே.தவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரினை விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வ.பத்மநாதன், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கட்டடத்திற்கான அடிக்கல்லைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.பரமேஸ்வரன், பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளர் கி.ஆறுமுகம் ஆகியோர் நட்டு வைத்தனர்.

நிகழ்வில் கல்விச் சமூகத்தினர், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-352-204)

## வயோதிபருக்கு எரிகாயம்

ஒட்டுசுட்டான்,ஓக15

குப்பி விளக்கு தட்டுப்பட்டு விழுந்து படுக்கையில் தீப்பற்றியதில் வயோதிபர் ஒருவர் பலத்த எரிகாயங்களிற்கு உள்ளானார்.

இந்தச் சம்பவத்தில் கற்சிலைமடுவைச் சேர்ந்த வ.சின்னையா (வயது 70) என்பவரே காயமடைந்தவராவார்.

எரிகாயங்களிற்கு உள்ளான இவர், திலீபன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (எ-341-204)




# மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி முடிவு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டக் கிளையின் ஆதரவில் விசுவமடு விவசாயிகளும், ஏற்று நீர்ப்பாசன சனசமூக நிலையத்தினரும் இணைந்து அண்மையில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தனர்.

மேற்படி போட்டி நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி விசுவமடு தொட்டியடியிலுள்ள மாட்டு வண்டிச் சவாரித் திடலில் நடைபெற்றது. மங்கள விளக்கினை விசுவமடு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன், விசுவமடு காவல்துறை பணிமனை காவல் துறை பொறுப்பாளர் ரகுராம் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் கைக்கொடி சவாரிப் போட்டிகள் இடம்பெற்றன. வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பிரிவு.அ**

மு.செந்தில்குமார் (பிரமந்தனாறு), ப.வதனி (தொட்டியடி, விசுவமடு), ஆ.ரவி (பன்னங்கண்டி, கிளிநொச்சி)

**பிரிவு.ஆ**

ப.தயோசன் (தொட்டியடி, விசுவமடு), க.அஜீபன் (தட்டுவன் கொட்டி), து.சிவா (விசுவமடு)

**பிரிவு.இ**

த.ரமேஸ்காந்தன் (பன்னங்கண்டி, கிளிநொச்சி), வி.வர்ணன் (கண்டாவளை), த.சோயிலா (விசுவமடு)

**பிரிவு.ஈ**

தி.வாகீஸ்வரன் (மல்லாவி), கு.ரஜிகரன் (சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி), உ.அனோசன் (சில்லா வீதி, வட்டக்கச்சி)

வெற்றி பெற்றவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணன் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

தமிழரின் பாரம்பரிய விளையாட்டாக மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி விளங்குகிறது. இந்த விளையாட்டுக்கள் கால் நடை வளர்ப்போரை ஊக்குவிக்கின்றன. தமிழர் பண்பாட்டின் ஓர் அங்கமாகத் திகழும் இப்போட்டியை வளர்க்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உதவிகளை வழங்கும்- என்றார். (எ-352-204)



பல வருடங்களாக இலங்கை வங்கியின் முல்லைத்தீவு கிளை முகாமையாளராக கடமையாற்றி தற்போது வவுனியாவிற்கு பதவி உயர்வு பெற்றுச்சென்றவரான அ.மயில்வாகனத்திற்கு முல்லைத்தீவு வங்கிக் கிளை ஊழியர்கள் பிரிவுபசார விழா நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். (படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்.)

## ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தோர் நினைவாக முல்லையில் நினைவாலயம்

ஒட்டுசுட்டான்,ஓக.15

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவாலயம் ஒன்று முல்லைத்தீவில் நிறுவப்பட்டுள்ளது. இதில் உயிரிழந்தவர்களின் பெயர், விவரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்களை உடனடியாக 'புனித அன்னம்மாள் ஆலயம், சிலாவத்தை, முல்லைத்தீவு' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பங்குத் தந்தை அருட்திரு. பத்திகாதர் கேட்டுள்ளார். (எ-341-204)

## மம்மில் பொதுமயானம் சிரமதானம் மூலம் புனரமைப்பு

வட்டக்கச்சி,ஓக15

வட்டக்கச்சி மாயவனூர் மம்மில் பொது மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் இந்தச் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட இந்த மயானத்தில் நீண்ட காலமாகத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

இதனையடுத்தே கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இந்தச் சிரமதானத்தை ஏற்பாடு செய்திருந்தனர் என்றும் - கூறப்பட்டது. (எ-405-203)

## 'விழி' மருத்துவ இதழ் வெளியானது

கிளிநொச்சி,ஓக.15

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வெளியிடப்படும் 'விழி' மருத்துவ இதழின் ஆவணி மாத இதழ் வெளியாகியுள்ளது.

59 ஆவது இதழான இதில் டாக்டர் முருகானந்தனின் 'காச நோய் சிசுக்களில் மூளைச் சவ்வு அழற்சியை ஏற்படுத்தலாம்' யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் சி.விபுலேந்திரனின் 'சின்னமுத்தும் , ஜேர்மன் சின்னமுத்தும்', சுகாதாரக் கல்வி அலுவலர் நா.பிரேம்குமாரின் 'புகை மனிதனின் பகை' போன்ற ஆக்கங்களும் இன்னும் பல அரிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (எ-405)

## பண்டாரவன்னியன் நினைவுதின விழா

ஒட்டுசுட்டான்,ஓக.15

வன்னி இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 202 ஆவது நினைவு விழா இம்முறை கற்சிலைமடுவில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் வளாகத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என பண்டாரவன்னியன் அறங்காவல் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை பண்டார வன்னியனின் சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும். பிற்பகல் அரங்க நிகழ்வு இடம்பெறும். கலை நிகழ்வு வரிசையில் பண்டார வன்னியன் வரலாற்று நாடகம் நடைபெறும். (எ-341)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு, காணி விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. இத்துடன் கோண்டாவில் டிப்போக்கு அருகில் 5 பரப்புக் காணியும் தாவடி, பத்திரகாளி கோயிலடியில் 3½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.கலைச்செல்வன், இராமகிருஸ்ண பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. T.P.: 077 3053063. (38872)

## தேவை

டாக்டர் ஒருவரின் 3 வயது ஆண் குழந்தையைப் பாரமரிப்பதற்குத் தேக ஆரோக்கியமும் நேர்மையும் உள்ள பெண் வேலையாள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 077 3268030. (38871)

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் கேபிள் தொலைபேசி இணைப்பு தேவையாகவுள்ளது. விற்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0777 570279. (38886)

## வீடு வாடகைக்குத் தேவை

நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்திற்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடனும் விசாலமான வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: No.310, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 021 - 222 3269. (38766)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979ஆம் ஆண்டு பிறந்த, பூசம் நட்சத்திரம், 5'5'' உயரம், G.C.E.O/L, கம்பியூட்டர் படித்துள்ள, கிரகபாவம் 68 உள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2268, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38740)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (8/47046)

## வேலைக்கு ஆள்தேவை

பதவி: உற்பத்திஅபிவிருத்தியாளர்களும் உதவியாளர்களும்.

தகைமை: B. Sc., G.C.E. A/L விஞ்ஞானம் G.C.E . O/L விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி.

எதிர்வரும் 25-08-2005 ஆம் திகதிக்கு முன்னர் அனுபவச் சான்றிதழ்களையும் இணைத்து விண்ணப்பிக்கவும்.

**சர்வதேச உயிர் நுட்பு**
BIOTEC INTERNATIONAL
131/2, PALALY ROAD,THIRUNELVELY (38862)(46)

## கடற்றொழிலாளருக்கு மீன் பிடி உபகரணங்கள்

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது கரைவலைத் தொழிலை இழந்த 40 கடற்றொழிலாளர்களுக்கு 'பாக்' நிறுவனம் கரை வலைகளையும் படகுகளையும் வழங்குகின்றது.

இதற்கான வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் உப சமாசத்தின் தலைவர் இ.சோதிலிங்கம் தலைமையில் குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவாளர் சங்க காரியாலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் அன்பழகன் சுனாமி கடல் அனர்த்த செயலணி பணிப்பாளர் சு.பாலையா பாக் நிறுவன திட்ட முகாமையாளர் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (ஒ-70)

## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)(26.14.45)

## இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு

**அம்பிகா அம்மா**

மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார்.

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்

உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்களின் வாழ்வில் வெற்றியும், சுபிட்சமும் அடையவும்

*அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் ஒரு முறைசந்தியுங்கள்.*

அம்மாவைச் சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்)

## கருமாரி அம்மன் ஜோதிடம்

**ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.

கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(26.14.45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 02 - 1918



மறைவு 28 - 07 - 2004

### கந்தையா கிருஸ்ணபிள்ளை

(முன்னாள் பிரபல வர்த்தகர், சாவகச்சேரி)

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓயாத அலைகளாய் திகழும் உங்கள்
அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து
என்றும் அழியாத அழிக்க முடியாத பாசத்தையும்
பழக்க வழக்கங்களையும் தந்து
வாழ்வின் முன்னேற்றத்திற்கும் ஏணியாய் இருந்து
உங்கள் ஆன்மாவை ஆண்டவன் தன் பாதத்தில்
இளைப்பாறச் செய்திட இறைஞ்சி நிற்கின்றோம்.

தகவல்:
பேரன்மார்களான: **கார்த்திக், தனுசிக்.**
077 6088302, 0777485727

யாழகம்,
37/14, தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(38884)(26.14.45)

## மரண அறிவித்தல்



திருமதி

### ஞானப்பிரகாசம் திரேசம்மா

போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் திரேசம்மா (பெரியபிள்ளை) 12.08.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானப்பிரகாசத்தின் (பாக்கியம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கராணி மற்றும் தங்கராசா(சுவிஸ்), ஜெயரட்ணம் (நோர்வே), விஜியகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேசி (பருத்தித்துறை), நேசமலர் (சுவிஸ்), இராஜகுமாரி (நோர்வே), பவளம்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, தனபாக்கியம், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்ரர் (நோர்வே), வினிற்றா (பிரான்ஸ்), காலஞ்சென்ற வினிவிறட் மற்றும் காண்டீபன், ஜெகன், பார்த்தீபன், பிரதீபன்கிறேஸ் (சுவிஸ்), ஷகி, ஸியாம், மரீன் (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (15.08.2005) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற்று, போயிட்டி லூர்து மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் போயிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஞானப்பிரகாசம் (பாக்கியம் - கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

போயிட்டி,
இளவாலை.
T.P.No.: 0776120466.

## ஏகாதசித் தீர்த்தம்

ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

ஏகாதசித் தீர்த்தவிழா நாளை (16-08-2005) செவ்வாய்க்கிழமை பகல் 8 மணிக்கு ஆரம்பமாகி 10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நாகேஸ்வரம் - அளவெட்டி.

பொ.ப.சபை.

(38746)(26.14.45)

## கோப்பாயில்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலைப்பயிற்சி

**இலவச அறிமுக உரை**

இன்று 15ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்: யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபம், பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

பயிற்சி நாள்கள்:-16.08.2005 முதல் 21.08.2005 வரை
காலையும் மாலையும் 6 மணிமுதல் 8 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு:- 077 9059549 - 077 9059544

நாவலர் மணிமண்டபம் நல்லூர் கோவிலடியில் அற்புதமான பஜனைகள் மற்றும் தியானம், ஆவணி மாதம் 20,21,27,28 மற்றும் புரட்டாதி 2ஆம் திகதிகளில் மாலை 7 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்*

www.artofliving.org (38587) www.srisriravishankar.org

## விற்பனைக்கு வந்துள்ளன!

### றபர் கால் மிதிகள்

உங்கள் இல்லங்களுக்கு. நிறுவனங்களுக்கு. விடுதிகளுக்கு-
தரைக்கேற்ற நல்ல தரமான கால்மிதிகள்!

[சிறியதும் பெரியதுமாய் - CANADIAN, SPAN, UNIVERSAL, NOVA, DOMINO MATS]

*நீடித்த பாவனை *விதமான டிசைன்களில்
விற்பனையாகின்றன.

இவையாவும் **DSI** குடும்பத்தின் உற்பத்திப்பொருட்கள்

நேரடித் தொடர்புகளுக்கு:
இல.13, நவீனசந்தை மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதிப்பக்கம்,
யாழ்ப்பாணம்.
021 222 7621

## கேள்வி அறிவித்தல்

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்
பணிமனை, கிளிநொச்சி.

### சீருடைத் துணிகள் வழங்குதல் - 2005

எமது பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்குச் சீருடைத் துணி வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. இதனுள் பின்வரும் நிறத்திலான துணிகளுக்குக் கூறுவிலை கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| 1) 45'' வெள்ளை மேலங்கித் (சேட்) துணி | - 140 மீ. |
| 2) 45'' கிறீம் (இளமஞ்சள்) மேலங்கித் (சேட்) துணி | - 327 மீ. |
| 3) 60'' வெள்ளை காற்சட்டைத் (ஜீன்ஸ்) துணி | - 56 மீ. |
| 4) 60'' கிறீம் (இளமஞ்சள்) காற்சட்டை (ஜீன்ஸ்) துணி | - 142 மீ. |
| 5) 36'' வெள்ளை கேம்பிறிஜ் துணி | - 08 மீ. |
| 6) 60'' காக்கி காற்சட்டை (ஜீன்ஸ்) துணி | - 420 மீ. |
| 7) 60'' நீலக் காற்சட்டைத் (ஜீன்ஸ்) துணி | - 11 மீ. |
| 8) 45'' இளநீல மேலங்கித் (சேட்) துணி | - 09 மீ. |

தங்களால் அனுப்பப்படும் விலை கோரல் விண்ணப்பத்துடன் துணி தரத்தின் தன்மையையும் குறிப்பிட்டு மாதிரித் துணி வகைகளை இணைத்து 31.08.2005ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். 31.08.2005 காலை 10.30 மணியளவில் கேள்வி திறக்கப்படும். மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம்: 021 228 5932, 021 228 5933.**

மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(கி-44098)(26-14-45)

# ஆன்மீக சாதனைக்கு நல்லூர் உறைவிடம்: அன்னை சடையம்மா வாழ்வு இதற்கு உதாரணம்

*ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான யோகி சடையம்மாவின் குருபூசை தினம் நேற்றாகும். அன்னையின் யோக வாழ்வு பற்றி விவரிக்கிறது இந்தக் கட்டுரை.*

ஈழவளநாட்டிலே சைவமும், தமிழும் தளைத்தோங்கிய நல்லையில் குடிகொண்டுள்ள நல்லைக்கந்தனின் ஆலயச் சூழல் பல்வேறு சித்தர்கள் ஆன்மீக சாதனை படைத்த இடம். இந்த சித்தர்கள் வரிசையிலே யோகி சடையம்மா அவர்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. இன்று அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைமடம் என அழைக்கப்படுகின்ற நல்லூர் ஆலய வடக்கு வீதியில் உள்ள சடையம்மா மடமே சடையம்மாவின் யோக சாதனையின் இருப்பிடம்.

நல்லூர் ஆலயத்துக்கு வடபாலுள்ள கிராமமாகிய திருநெல்வேலி கிழக்கில் செங்குந்தர் மரபில் வந்த வீரகத்திப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் தவப் பயனால் 1865 ஆம் வருடம் ஆவணித் திங்கள் ரோகினி நட்சத்திரத்துடன் கூடிய சுபவேளையில் சடையம்மா அவதரித்தார். முத்துப்பிள்ளை என்பது அவரின் பிள்ளைத் திருநாமம்.

பெற்றோரைப் போலவே இறைபக்தியில் சிறந்து விளங்கிய முத்துப்பிள்ளை நல்லூர் சட்டநாதர் சிவனையும், நல்லூர்க் கந்தனையும் தினமும் வழிபட்டு வந்தார். திருநெல்வேலியைச் சேர்ந்த கதிரேசு என்பவரைக் கரம் பிடித்த இவரால் இல்வாழ்வை சிறப்பாகத் தொடர முடியவில்லை. திருமணம் நடந்து சில மாதங்களில் கணவருக்கு பைத்தியம் உண்டானது. அம்மையார் ஒரு நாள் இரவு கண்ட கனவுப்படி மறுநாள் காலை நல்லைக் கந்தன் ஆலய வைரப் பெருமான் சந்நிதிக்குச் சென்று கணவருடன் 40 நாள்கள் தவமிருந்து சரியைத் தொண்டாற்றி வந்தார்.

இவ்வாறு ஆற்றிவரும் நாளில் கடையிற் சுவாமிகளின் அருளைக்கேள்வியுற்று இருவரும் அவரை நாடித் தரிசனம் பெற்றனர். சுவாமிகளின் தரிசனமும் வைரவப் பெருமானின் அருட்கடாட்சமும் கதிரேசரின் பைத்தியத்தை நீக்கின, இல்லறத்தில் நல்லறமாக வாழ்ந்த முத்துப்பிள்ளை அவர்கள் இருபெண்குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இரண்டாவது குழந்தை பிறந்த 6 மாதத்தில் கணவரும் மனைவியும் கனவு கண்டனர். அது மாங்கல்யம் சம்பந்தமாகவும், கதிர்காம யாத்திரை சம்பந்தமாகவும் இருந்தது.

இறையுணர்வு மேலோங்க அன்னை முத்துப்பிள்ளை தனது மாங்கல்யத்தை கழற்றி கணவரிடம் கொடுத்துவிட்டு தன் பிள்ளைகளையும் கணவரிடம் கொடுத்து கணவரை தெய்வமாக வணங்கி அவரைப் பிரித்து நல்லூர் ஆலயத்தைச் சென்றடைந்து சரியைத் தொண்டாற்றி வந்தார். நல்லூர் ஆலய வீதியிலே குருபூசை மடம் அமைத்து அங்கே யோக சாதனைகளை ஆற்றிவந்தார். அவ்வாறு இருக்கையில் அவரின் தலைமுடி சடையாக வளர்ந்திருந்தமையால் அவரை பலரும் சடை யம்மா என அழைத்தனர். அன்னை சடையம்மா அவர்கள் கதிர்காம யாத்திரை சென்றார். அங்கிருந்து மீண்டும் நல்லூரை அடைந்த அவர் தமிழகத்திலுள்ள ராமேஸ்வரம் சென்று சேது தீர்த்தம் ஆடி அங்கி ருந்து காசி, கங்கை, கவேரி போன்ற தலங்களுக்கும் தீர்த்த யாத்திரை செய்தார். இவ்வா றாக ஆன்மீக பலம்பெற்றார்.

நல்லை மீண்ட சடையம்மா கந்தப்பெருமானின் கட்டளையை ஏற்று அன்னதானப் பணிகள் ஆற்றினார். பல இடங்களில் மடாலயங்கள் அமைத்து வழிபட்டார். தனது அடியார்களின் உதவியுடன் கதிர்காமத்திலும் மடாலயம் அமைத்து அன்னதானம் மேற்கொண்டு வந்தார். வருடாவருடம் நல்லூரில் இருந்து கதிர்காமத்துக்கு ஆடிப் பெருவிழாவின் போது யாத்திரையும் சென்று வந்தார்.

## நல்லைக் குகன்

ஏழாவது முறையாக யாத்திரையை முடித்துக் கொண்ட அன்னை நல்லூர் வடக்கு வீதியிலே யோக நிஷ்டையில் அமர்ந்தார். ஆத்மீக சாதனைகளின் மூலம் தனது வாழ்வை அன்னை சடையம்மா முற்றாக மறந்தார். இறைவன் பால் அன்புகொண்டு பக்தியோக நிலையை எய்தினார். அன்னை அவர்கள் பக்தியோகத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டாகவும் விளங்கினார். ஆன்மீக யோக வளர்ச்சியில் கூறிய சிந்தனையும் ஆன்ம அறிவையும் கொண்ட அன்னை ஞானயோகம் வாய்க்கப் பெற்றார்.

தனது இறுதிகாலத்து யோக சாதனை ஆற்றுவதற்குரிய இடமாக கீரிமலை தீர்த்தக் கரையை தெரிவுசெய்த அன்னை சடையம்மா அங்கு தியான யோக பயிற்சிகள் புரிவதற்கும் பிதிர்க்கடன் ஆற்றுவதற்கும் ஒரு மடத்தை அமைத்து அங்கு யோக சாதனைகளை ஆற்றிவந்தார். இவ்வாறு யோகசாதனைகளை ஆற்றிவந்த அன்னை தான் கூறியபடி 1936ஆம் வருடம் ஆடித்திங்கள் சுக்கிர வாரமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய வேளையில் மகா சமாதி அடைந்தார். இவரின் சமாதி வைபவத்தை சிவத்திரு சிவயோக சுவாமி முன்னின்று நடத்திவைந்தார்.

அன்னையின் அரும்பெரும் யோக நிலையை வெளிப்படுத்த அன்னையின் புனித சடையின் பகுதிகளை கதிர்காமத்திலும் திருச்செந்தூரிலும் வைத்து சமாதி ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ✱

# திட்டமிடலில் ஒருங்கிணைந்த அணுகுமுறையும் பனை, தென்னை மீள்நடுகையும் அவசியம் தேவை

## முள்ளிப்பற்று கிராமம்: ஓர் அபிவிருத்திப்பார்வை

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

*முள்ளிப்பற்று கிராமத்தின் அபிவிருத்தி பற்றி ஆய்வுக் கட்டுரையின் முதல் பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அதன் எஞ்சிய இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.*

இந்நீரேரியில் பின்வரும் ஆறுகள் நீரைக் கொண்டு வந்து சேர்க்கின்றன. அவையாவன:-

தேரவில் ஆறு, பிரமந்தன் ஆறு, நெத்தலி ஆறு, கனகராயன் ஆறு வடமராட்சி கிழக்குக் கடல் நீரேரியைப் பலப படுத்துவதற்கு இதன் கிழக்குக் கரையோரத்தில் பெரிய அணையும் மேலதிக வெள்ளநீர் பாயும் கதவுகளும் அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படின் உவர்நீர் உள் வருதைத் தடுப்பதுடன் ஆனையிறவு கிழக்கு நீரேரியின் நீர்கொள்ளவு அதிகரித்து, வடமராட்சி கிழக்கு நீரேரிக்குள் செல்லும்.

II) ஆனையிறவு கிழக்கு நன்னீரேரியை மூன்றாகப் பிரித்து அவை ஒவ்வொன்றின் தன்மைக்கேற்ப அவற்றை விருத்தியாக்கல்.

மேற்குறிப்பிட்ட இரு பிரேரணைகள் போன்று வேறு பலவும் காலத்திற்குக் காலம் முன்மொழியப்பட்டன. ஆனால், ஆனையிறவு கிழக்கு நன்னரேரியையும் மேற்கு உவர் நீரேரியையும் பிரிக்கும் அணையைத் தவிர வேறு எத்திட்டமும் இதுவரை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவில்லை. A9 பாதையும் புகையிரப் பாதையுமே இவ்விரு ஏரிகளையும் பிரிக்கும் அணைகளாகும்.

பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிப் பாயும் பருவகாலச் சிறு ஆறுகள் வடக்கு நோக்கி திசைதிருப்பப்பட்டு, ஆனையிறவு கிழக்கு நீரேரியில் இவற்றின் நீர் சென்றடையச்செய்யவேண்டும். இதன் மூலம் இரு நன்மைகள் கிட்டும்.

1) ஆனையிறவு கிழக்கு நன்னீரேரிக்கும் கூடுதலான நன்னீர் கிடைக்கும்.

2) ஆனையிறவு உப்பளப்பகுதியில் கிழக்கு ஆறுகளால் கொண்டுவரப்படும் வெளள நீர் தடுக்கப்படின் உப்பு விளைச்சல் இலகுவானதாகவும் தரம் கூடியதாகவும் அமையும். A 9 பாதை அண்மையில் திருத்தப்பட்ட போது பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பாலங்கள் பல பெருஞ்செலவில் திருத்தப்பட்டன. இதற்குப் பதிலாக இலகுவான வடிகால் அமைப்பின் மூலம் இவ வாறுகளின் நீரை ஆனையிறவு கிழக்கு நீரேரிக்குத் திருப்பி விட்டிருக்கலாம். இது திட்டமிடலில் ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்காததால் ஏற்பட்ட நிலையாகும்.

3) இப்பிரதேசத்தில் தென்னை, பனை, மீள செய்கை ஊக்குவிக்கப்படவேண்டும். இப்பிரதேசம் இப்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மண் வளத்தைக் கொண்டுள்ளது. இதற்கு இங்கு கமநல சேவை நிலையம் ஒன்று அமைத்தல் அவசியமாகும்.

4) கிழக்குக் கரையோரம் சுண்டிக்குளச் சரணாலயம், ஆனையிறவுக் கடல் நீரேரி, கோட்டைகள் என்பனவற்றை விருத்தி செய்து சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும்.

5) ஆனையிறவுக்கும் இயக்கச்சிக்கும் இடைப்பட்ட பிரதேசம் குறிப்பாக A9 பாதையை அண்டிய பிரதேசங்களைக் கைத்தொழில் பிரதேசங்களாக விருத்தி செய்யலாம். குறிஞசாத்தீவு உப்பளத்தை நவீன முறையில் விரிவுபடுத்தி உற்பத்தித்திறனை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

6) இப்பிரதேசத்தினதும் அயற் கிராமங்களான மாசார், மல்வில், சோரன்பற்று, கரந்தை போன்றவற்றின் வளர்ச்சிக்காக இயக்கச்சியை நடுத்தர நகரமாக விருத்தி செய்ய வேண்டும். இங்கு சந்தை, பாடசாலை, வைத்தியசாலை, வர்த்தக சேவைகள், வங்கி மற்றும் தொலைதொடர்பு வசதிகள் உருவாக்கப்பட வேண்டும. இந்தநகரம் இப்பிரதேசத்திற்குப் பொருள்களையும் சேவைகளையும் வழங்கும் நிலையமாக விளக்கவேண்டும். அத்துடன் புதுமைகளை உருவாக்கும் இடமாகவும் பரப்பும் இடமாகவும் அமையவேண்டும். மேலும் இந்த நகரம் A9 பாதை வழியாகப் பயணிப்போரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவை நிலையமாகவும் வளரவேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையம், உணவுச்சாலைகள், மலசலகூட வசதிகள போன்றன அமைக்கவேண்டும். இயக்கச்சி நகரின் வளர்ச்சியிலேயே முள்ளிப்பற்றின் வளர்ச்சி தங்கியுள்ளதெனக் கூறலாம்.

இப்பிரதேசத்தில் மின்சாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்றன விருத்தியடையாத நிலையில் உள்ளன. இவறறை விருத்தியாக்க ஒருங்கிணைந்த அபிவிருத்தித திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். யுத்தத்தாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டு நிர்மாணம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பல அமைப்புக்களின் நிதி உதவித் திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. இத் திட்டத்தில் இப்பிரதேசம் முன்னுரிமை பெறின் இன்றைய பின்தங்கிய நிலை ல் இருந்து விடுபட வாய்பபேறபடும்.

இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு இயககச்சி அரசினர் தமிழ்ப் பாடசாலை க.பொ.த உயர்தர வகுப்புகள் கொண்ட பிராந்தியப் பாடசாலையாக விருத்திசெய்யப்பட வேண்டும். இப பாடசாலை பளைக்கும் பரந்தனுக்கும் இடையல் முக்கிய பாடசாலையாக மாறுவதுடன் மிகப்பெரிய பிரதேசத்தில் வாழும் மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையமாக மாறவேண்டும். இதனது இட அமைவு இதன் விருத்திக்குச் சாதகமாக அமைந்துள்ளது. இதே போல வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் கரையோரப் பிரதேசப் பிள்ளைகளின உயர்கல்வியைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மற்றும் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கோவில் வயல் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகள் விருத்தியாக்கப்பட வேண்டியது இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஏனைய பிறதுறை வளர்ச்சிகளுக்கும் அடிப்படையாக அமைகின்றது. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படின் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுத்தப்படும். இதன வழியாக முள்ளிப்பற்று புதிய அபிவிருத்திப் பாதையில் முன்னேற வழி பிறக்கும். ✱




ஆறாம் திருவிழா
தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனே!
தொழுமடியார் வினை தீர்ப்பாய் ஐயனே!
விழா சிறப்புற வாழ்த்துவோர்:
அசல் 22 கரட் தங்க நகைகளுக்குச் சிறந்த இடம்
எகோனியா நகையகம்
சங்கரத்தைச் சந்தி. சங்கரத்தை.
(C/44092)


## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஒக.15

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் ஆறாம் நாளான இன்று திங்கட்கிழமை யசோதா ஸ்ரீகுமரன், சந்திரிகா கணேஸ்வரன் ஆகியோரின் பாட்டு இடம்பெறும். அணி செய்கலைஞர்கள் வயலின் - ரோகினி அருளையா, மிருதங்கம் என்.மாதவன். (எ-203)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பேடு




### இயற்கையின் சீற்றம்

*இயற்கையின் சீற்றம் எழுந்தது கந்தா!*
*இன்னல்கள் பெருகின எங்கும்*
*மயக்குறு செயல்களும் மமதையும் பகைமையும்*
*மலிந்தன, மக்கள்தம் வாழ்வின்*
*இயக்கமோ தயக்கமாய் இறுக்கமாய் இருக்குதே*
*எப்படி வாழ்வியல் மலரும்?*
*பயக்குறு வழியினில் பாரகம் முழுவதும்*
*பயனுற எழுந்தருள் வாயே!*

- முருகனடியான்

### நல்லூர் முருகா எல்லாம் எனக்கு நீதான்!

*உன்தன் நினைப்பை என்நெஞ்சம் மறக்கவில்லை*
*உனையன்றி வேறொரு தெய்வம் நினைக்கவில்லை*
*உன்தன் புகழ்தனைப் பாடாமல் இருக்கவில்லை*
*உன்நாமம் நாளெல்லாம் ஓதாமல் விடவேயில்லை*
*உன்தன் கருணைக் கடைகண் காட்டவில்லை*
*உனக்காக என்வாழ்வைத் தரநான் மறக்கவில்லை*
*உன்தன் விளையாட்டை எண்ணாமல் உறங்கவில்லை*
*உன்தொண்டு புரியாமல் என்வாழ்வு ஒய்வதில்லை*

- வ.யோகானந்தசிவம்.

### வேலன் கழல் பணிவோம்

*பல்லவி*

*நல்லை முருகன் பெயர் நாளும் நினைந்து வந்தால்*
*இல்லைபயம் எமக்கு வாழ்வினிலே - நல்லை*

*அனுபல்லவி*

*தொல்லை வினை தீரும் துன்பம் பறந்தோடும்*
*வல்ல திருமுருகன் வாழ்வில் துணைவருவான் நல்லை*

*சரணம்*

*தில்லை நடராஜன் செல்வத் திருக்குமரன்*
*முல்லைச் சிரிப்புதிர்க்கும் முருகன் அவனன்றோ*
*கல்லைக் கனியாக்கும் கந்தனவன் கருணை*
*வெல்லும் வரமருளும் வேலன் கழல் பணிவோம்*

- ப.க.மகாதேவா.

## மதுரை மீனாட்சி அம்மன்

அருள்வாக்கும் ஜோதிடமும்

**K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி**

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். [காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை]

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376) (54-34-18)



## பண்டகசாலைப் பொறுப்பாளர் (Storekeeper) தேவை

க.பொ.த.(சா/த) தேர்ச்சிபெற்ற சுயமாகவும் சுறுசுறுப்பாகவும் வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த பண்டகசாலைப் பொறுப்பாளர் (ஆண்) தேவை. நற்சாட்சி விவரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:திட்ட முகாமையாளர்,
புறோமோட்டேர்ஸ்
என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-44086)



## கதிர் (அமல்) பல் மூக்குக் கண்ணாடியகம்

**Amal Dental & Optical Works**

இலவசமாக கண்பரிசோதித்து நவீனரக பிறேம்களில் காலநிலைக்கேற்ற பார்வைக்கண்ணாடி வழங்குதல், கூலிங் கிளாஸ் வழங்குதல், றிம்லஸ் கூலிங்கிளாஸ் வழங்குதல் என்பனவும்.

சிறந்த சங்குப்பற்களை கட்டிக்கொள்ளவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும். நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் **அமல் பல் மூக்குக் கண்ணாடியகம்.**

தொடர்புகளுக்கு:

A9 சாலை
அரச அதிபர் இல்லம் முன்பாக
கிளிநொச்சி.

கிளை:-
பரந்தன் சாலை,
புதுக்குடியிருப்பு.

(C/44484)(51-11-15)


## பங்குக்குருமார் நியமனம்

குருநகர், ஓக.15

வண.பிதா ஜி. வி.பிலேந்திரன் அடிகளார் பாண்டியன்தாழ்வுப் பங்கின் பங்குக்குருவாகவும் வண.பிதா எம்.றெக்ஸ் சௌந்தரா கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பங்குக்குருவாகவும் வண.பிதா ஜி.அருள்நேசன் நெடுந்தீவுக்கான பங்குத்தந்தையாகவும் வண.பிதா எக்ஸ்.டபிள்யு.ஜேக்ஸ் ஊர்காவற்றுறைக்கான பங்குத் தந்தையாகவும் யாழ். ஆயரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(எ-51)


PRESIDENT CFL

பல்புகள் இப்போது இலகு தவணையில் கிடைக்கும்
- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் Iso 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும். (38346)(26.14.45)

தொடர்பு: **Light Line,**
580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.





இதோ...
வெளிவந்துவிட்டது ஆகஸ்ட் மாத
பூங்கனி
சிறுவர் மாத இதழ்
சிறுவர்கள் விரும்பி வாசிக்கும் சகல அம்சங்களையும் தாங்கி புதிய பரிமாணத்துடன் வெளிவந்திருக்கிறது
நாடு முழுவதுமுள்ள சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கிறது.
"வாசிப்பு ஒன்றே பூரணமான எதிர்காலத்தை உருவாக்கும்"


## Pre - Qualification notice for the post - Tsunami Programme

SDC calls for pre - qualifying contractors who could take - up school building contracts in Vadamaradchy East. The application should reach THE PROJECT MANAGER, SWISS AGENCY FOR DEVELOPMENT AND COOPERATION (SDC), Field Office, Jaffna - 521/11,PointPedro Road, Nallur, Jaffna, on or before 20th of August 2005.

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காப்)
## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
## ஆ அவ கடன் இல.: 2043 சிறி (எஸ்எவ்)
## கேள்வி அறிவித்தல் -இல: 49
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசப் புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன்,கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும்NECORD திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலை களுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ.இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த (ICTAD)பதிவு | கேள்விப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/CAARP/IR/02 | மன்னார் 11 ஆவது மைல் கட்டுக்கரைக் குளம் புனர்நிர்மாணம் | M5 நீர்ப்பாசனம் | 159,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகோருவதற்குத் தகுதியுடையவர்கள்.
   - I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசியநிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தர மொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTADடுடன் M7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   - III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல்வேண்டும். இது வாடிக்கையாளரிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்குமாறு கேள்விகோருவோர் வேண் டப்படுகின்றனர்.
   - IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - V ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் அடங்கலாகாது.
   - VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்குமுன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்விதொடர்பான மேலதிக தகவல்களை *55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில்* பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434, பக்ஸ்: 026 2227401, இணையத்தளமுகவரி: www.necord.org ஈ.மெயில்:necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 16-08-2005 இலிருந்து 29-08-2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5,000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்டுள்ள உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் *தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை* என்ற விலாசமிடப்பட்டு, 05-09-2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 25-08-2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு த் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**நா.புகேந்திரன்,**
பதில் தலைவர், கேள்விச் சபை,
வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,
55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை.

(சி-44085)(26-14-45)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

14-08-2005 - 20-08-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
※ சக்தி குறைவு ※ ஞாபக மறதி ※ பயம் ※ நடுக்கம்
※ நித்திரைக் குறைவு ※ ஆண்மைக் குறைவு ※ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-44051) (26.14.45)


## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நிறைவு



மண்ணுலகில் 09 - 07 - 1945

விண்ணுலகில் 15 - 08 - 2004

திருமதி
## மேரிவதனா தெலஸ்போ

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் ஓயாத
அலைகளாய் நிதமும் உங்கள் நீங்காத நினைவு
நெஞ்சை வருடிச் செல்கின்றன
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்ந்து என்றும் அழியாத அழிக்கமுடியாத
பாசத்தைத் தந்து வாழ்வின் முன்னேற்றத்திற்கும்
ஏணியாய் இருந்த உங்கள் ஆன்மாவை
ஆண்டவர் தன் பாதத்தில் இளைப்பாறச் செய்திடுவார்.

R.C. சேச்,
உடுப்பிட்டி.
(38863)(26.14.45)

**கணவர், பிள்ளைகள், சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# உயிராபத்தான பண்ணைப் பாதை சீர்பெறுவது எப்போது?



**செய்திக்கட்டுரை**

கை.பேரின்பநாயகம்
மண்டைதீவுச் செய்தியாளர்

**யா**ழ்ப்பாணத்திலிருந்து தீவகத்துக்கான ஒரேயொரு தரைவழிப்பாதை பண்ணை வீதியாகும். பண்ணைக் கடலை ஊடறுத்துச் செல்லும் இந்த இரண்டு கிலோ மீற்றர் வீதியின் நுழைவாயில் டச்சுக்கோட்டைக்கு அண்மையில் பண்ணைப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. தீவகத்தை யாழ். நகரப் பகுதியுடன் இணைக்கும் பிரதான பாதை இதுவாகும்.

யுத்த காலத்தில் சேதமடைந்த இந்தப் பாலம் 1996ஆம் ஆண்டில் 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் பின் தற்காலிகமாகத் திருத்தப்பட்டது. சுமார் 30 அடி நீளமான இரும்புச் சட்டங்களையும் மெல்லிய அடித்தள தகர விரிப்பையும் கொண்டதாகத் தற்பொழுது இப்பாலம் காணப்படுகிறது. இதன் அடிக்கட்டுமானம் பாரிய அளவில் சேதமடைந்துள்ளது.

பாலத்தின் தள விரிப்பு உறுதியற்றதாக - பலவீனமான தகடுகளைக் கொண்டிருப்பதால் அடிக்கடி திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### எச்சரிக்கை

தற்பொழுது இதன் முகப்புப் பகுதியில் 'மிக மெதுவாகப் போகவும்' என்ற எச்சரிக்கைப் பலகை காணப்படுகிறது. ஒரு சிவப்பு நிறத் துணியும் தொங்கவிடப்பட்டுள்ளது.

பாலத்தின் இரண்டு பக்கச் சரிவுகளிலும் மிக நெருக்கமாக வேகத்தடைகள் போடப்பட்டுள்ளன. பாலத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் கூட இவை உண்டு.

ஒரு தடையில் ஏறி இறங்கும் இரு சக்கர, முச்சக்கர வண்டிகள் தள்ளாடிச் சமநிலைக்கு வர முன் அடுத்த தடையில் ஏறிக் குதிக்க வேண்டியுள்ளது. இதனால் சிறிய விபத்துகள் ஏற்பட்ட பொழுதும் பாரிய உயிராபத்துகள் இதுவரை நிகழாதது அதிர்ஸ்டவசமானதே.

பண்ணைக் கடலின் ஆழம் கூடிய பகுதி தான் மையப்பகுதியிலேய உள்ளது. இது அலுப்பாந்தியையும் ஊர்காவற்றுறையையும் இணைப்பதற்காக வெட்டப்பட்ட கால்வாயாகும். கால்வாய் மண் கொட்டப்பட்டதாலேயே சிறுதீவு உருவாகியதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கால்வாய்ப் பகுதியில் ஒரு நீளமான பாலத்தைக் கட்டுவதற்கு 1957, 1958 காலப் பகுதியில் திட்டமிடப்பட்டு இருந்தது. அப்போது 'மாருதப் புரவி' என்றழைக்கப்பட்ட திறந்த போக்குவரத்துக் கப்பல் சேவையில் ஈடுபட்டிருந்தது. அந்த ஆழமான பகுதியில் பாலம் அமைக்கத் தென்னிலங்கையில் இருந்து தொழிலாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். கோட்டைப் பகுதியில் பாரிய 'கொங்கிறீற்' தூண்களும், சிமெந்து சலாகைகளும் அறுத்து அடுக்கப்பட்ட நிலையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

பண்ணைக் கடல் படுக்கையில் மிக ஆழத்திற்குச் சேற்றுப்படைகள் காணப்பட்டதைக் காரணம்காட்டி இதை ஆய்வு செய்த பொறியியலாளர்கள் பாலம் கட்டும் திட்டத்தைக் கைகழுவிவிட்டனர்.

### புதிய வீதி அமைப்பு

பின்னர் கற்களைக் கொட்டி நிரப்பி வீதியமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நீரோட்டத்தைச் சீர்செய்வதற்கு மிக நெருக்கமான இடைவெளிகளில் ஆழமான மட்டங்களில் குழாய்கள் வைக்கப்பட்டு 'தாம் போதி' அமைக்கும்வேலைகள் துரிதமாக்கப்பட்டன.

இரண்டு பக்கங்களாலும் கற்கள் கொட்டப்பட்டு வாய்க்கால் மூடப்பட்டது. 1960 ஆண்டு நடுப்பகுதியில் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வீதி பூரணப்படுத்தப்பட்டது. வீதியின் இடையே வாகனங்கள் தரித்து நிற்பதற்கும் விலகிச் செல்வதற்கும் அகலமான பகுதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

கடலின் நடுவில் அமைக்கப்பட்ட வீதியில் ஓரா மீன்கள் பாய்ந்ததும் இந்த வீதி தூண்டில் போட்டு மீன்பிடிக்கும் மையமாகவும் உருவானது.

### பண்ணைப் பாலம்

குருநகர் மற்றும் நாவாந்துறை மீனவர்கள் இந்தவீதியால் தத்தமது பகுதி நீரேரிக்குள் முடங்கவேண்டியதாயிற்று. தற்பொழுது பாலம் உள்ள இடத்தில் மீன்பிடிப்படகுகள் கிழக்கு மேற்காகச் சென்றுவர ஒரு தொங்கு பாலத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டதே பண்ணைப்பாலம்.

இலங்கைப் பெருந் தெருக்கள் திணைக்களம் அமைத்த இரண்டு தொங்குபாலங்களில் மிகச் சிறந்ததாக இந்தப் பாலம் கருதப்பட்டது. பக்கவீதி அமைக்கப்பட்டு பல மாதங்களாக மிகப்பலமான அடித்தளக் கட்டுமானத்தின் மீது இரும்புச்சட்டங்களால் ஆன 12x12 அடி நீள அகலமான பாலம் பொருத்தப்பட்டது. இரும்புத் தூக்கியும் அமைக்கப்பட்டது.

குறித்த நேரத்தில் மட்டும் பாலம் உயர்த்தப்பட்டு சிறிய மீன்பிடி படகுகள் 'பிளா' வள்ளங்கள், 'பீடி' வள்ளங்கள், பாய் மரங்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டன. பாய் மரம் இல்லாத படகுகள் எந்த நேரத்திலும் பயணிக்கமுடியும். 'வத்தைகள்', 'டிங்கிகள்' போன்ற பெரிய படகுகள் இதனூடாகச் செல்ல முடியாது. பாலத்திற்கு அண்மையில் தரித்து நின்றே இவை பொருள்களை ஏற்றிக்கொண்டு நெடுந்தீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்குச் சென்றன.

போர் அனர்த்தங்களால் பாலத்திற்குக் கஷ்டகாலம் ஆரம்பித்தது. பாலம் மட்டுமன்றி பண்ணை வீதியின் பல பகுதிகளும் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. பாலமும் பெரும் சேதமடைந்தது.

### பலமான பாலம்

இத்தனை அனர்த்தங்களின் பின்பும் அடித்தளம் ஒரு தற்காலிக பாலத்தைத் தாங்கி நிற்கிறதென்றால் அதை வடிவமைத்த பொறியியலாளர்களின் திறமைக்கு அது தக்க ஒரு சான்றாகும்.

### இன்றைய நிலை

தற்போது இந்தப் பாலத்தில் பயணிக்கும் ஒவ்வொரு பயணியும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் செல்லவேண்டி உள்ளது.

இந்த வீதி அகலமாக்கப்படுமா? பாலம் எப்பொழுது உறுதியானதாக அமைக்கப்படும்? உயிராபத்து இல்லாத பயணத்தை எப்பொழுது மேற்கொள்ள முடியும்?

தீவக மக்களிடமிருந்து எழும் இந்தக் கேள்விகளுக்கு விடை யார் தருவார்கள்?

---

# இந்த வார இராசி பலன்

## 14.08.2005 - 20.08.2005

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ். | | |
| | இராசிச் சக்கரம் | | சூரி. புதன் சனி |
| | | | |
| | சந். | | வெள். கேது |

### மேடம்

**தி**ட்டமற்ற செயற்பாடு, பெரியவர்களின் உதவிகள் கிடைத்தல், வேலையில் சிந்தனை, உற்சாகம் ஏற்படல், மெல்லமெல்ல பொருள் வருதல் என்பன நடக்கும் காலமாகும், நிறைவேறாத ஆசைகளால் துன்பங்கள் தொடர வழி உண்டு. கண் எரிவு கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

**ப**ணவரவு ஏற்படும், நன்மைகள் அதிகரிக்கும், எதிர்பாலாரால் நன்மைகள் ஏற்படும். கை, கால் தாக்கங்கள் ஏற்படும். அக்கினி, மின்சாரப் பயம் உண்டு. புத்திரர்கள், சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாதபித்த ரோகம் வந்துபோகும். வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### மிதுனம்

**ஆ**சையே துன்பத்திற்குக் காரணம் என்றார் ஒரு பெரியார். ஆசைகளை குறைக்கவோ, தடுக்கவோ முடியவில்லையென்ற கவலை உங்களுக்கு. விரயங்கள், செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் நன்மைக்காகப் போராடுவீர்கள். உங்கள் வாக்குச் சாதுரியத்தால் பலகாரியங்கள் அனுகூலமாகும். ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், சனி.*

### கடகம்

**அ**மைதியற்ற நிலை. தொழில் ஸ்தானத்தில் போராட்ட உணர்வு ஏற்பட இடமுண்டு. அடிக்கடி கனவு. தலைநோ உஷ்ண பீடைகள் ஏற்படும். புத்திரரின் நன்மைக்காக அலைய நேரிடும். பித்தம் தலைதூக்கும். அரசியல்வாதிகள், ஆசிரியத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், சனி.*

### சிங்கம்

**கா**ல், பாதங்களில் நோ வரும். தொழில் ஸ்தானத்தில் நல்லவை நடக்காது. எதிர்ப்புகள் மேலிடும். நண்பர்கள் உதவி செய்வார்கள். சனீஸ்வரனால் மனவேதனை கொடுக்கும். திடீரெனச் சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணங்கள் வரவாய்ப்பு உண்டு. வியாபாரிகளுக்கு, இரும்புத் துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### கன்னி

**ப**ணவரவு ஏற்படும். பொதுத் தொண்டு, தானதர்மம் செய்து புகழடைவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். அரச உதவிகள் கிடைக்கும். தனம் வரும். பொருள் வரும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வாகன சுகம் உண்டு. வியாபாரிகள், தரகு வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### துலாம்

**ஓ**டிஓடித்திரிந்து இலாபம் தேட முற்படுவீர்கள். எதிர்ப்பாலார்கள் உதவிகள் செய்து தருவார்கள். குடும்பத்தில் கொண்டாட்டங்கள் இருக்கும். புதிய திட்டங்கள் நன்மை தரும. கால் பகுதியில் நோவரலாம். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புகள் இருந்தாலும் முன்னேற்றம் அடைவீர்கள். சட்டத்துறையினர், குருத்துறையினருக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

**அ**டிக்கடி கோபங்கள் வரும். பொருளால் யோசனை வரும். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். பிறரிடமிருந்து பொருள் வரும். தேடி வரும் பதவியை உதறித் தள்ளிவிடாதீர்கள். வீண்பொழுது - வாகனச் சிறப்பு கொடுக்கும். பெரிய இடத்துடன் தொடர்பு ஏற்படும். போக்குவரத்துத்துறை தொடர்பாடல்துறை தொழில் செய்பவர்களுக்கு நன்மை ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### தனுசு

**எ**தையும் எதிர்கொண்டு போராடுங்கள். அரச அதிகாரத்திலுள்ள எவரும், மாமன், மாமி முறையினரும் எதிர்ச் செயல்களைச் செய்வார்கள் உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும். ஆஸ்பத்திரி செல்லும் நிலை ஏற்படும். பொது விஷயங்களில் அவதானமாக இருக்கவும். பிரயாணத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

**தொ**ழில் ஸ்தானத்தில் நன்மை நடக்கும். பொருள் வரவும் அதிகரிக்கும். செலவுகள் கட்டுமீறும். சகோதரங்களுடனும், மாமன் வழியினருடனும் மனக்கசப்பு ஏற்படும். புத்தி சாதுரியமாக நடந்து கொள்ளுங்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும் - பிரயாணத்துறை, கடல்துறைத் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி.*

### கும்பம்

**ம**னதில் ஒரு தடுமாற்றம், பாடுபட்டுத் தேடியதை பாதியில் பறிகொடுக்க நேர்ந்தால் மனம்தாங்காதுதான். உலகம் திட்டமற்ற நிலையில் இயங்குவதில்லை. உங்களின் திட்டமற்ற நிலைதான் காரணம். வருங்காலத்தில் திட்டத்துடன் இயங்கவும். பெரியவர்கள் உதவுவார்கள். பணவரவு அதிகரிக்கும். கால் வருத்தம் கொடுக்கும். ஆசிரியத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி, சனி.*

### மீனம்

**பு**திய திட்டங்களால் நற்பலன்கள் அதிகரிக்கும். தொழில்துறையில் நன்மைகள் அதிகரிக்கும். பணவரவு அதிகரிக்கும். புத்திரர்கள், சகோதரர்கள் உங்கள் மூலம் நன்மை அடைவர். தலையிடி, பித்தக் கொதிப்பு வரும். பிரயாணத்துறையினர், குருத்துறையினர், வாசனைப் பொருள் மருந்து வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வெள்ளி, சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

வ
சாயிராம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும்
மனித நேயமும் ஒருங்கே பெற்ற
**மாண்புமிகு திருவாளர்**

## து.ரகு

**அவர்களுக்கு**
**மக்கள் வங்கியின்**
**யாழ். பிராந்திய முகாமையாளராக**
பதவியையும் வாரி வழங்கிய இறைவனுக்கு
நன்றி கூறுவதுடன் -
எமது வளர்ச்சிக்கும் பாலம் போன்று வடிகால்
அமைத்துக் கொடுத்த பரிசுத்தமானவருக்கு
எம்முடைய மனமார்ந்த வாழ்த்துக்களுடன்
மனதாரப் பாராட்டுகளையும்
தெரிவித்துக்கொள்கிறோம்.
மேன்மேலும் பலபல பதவிகள் பெற
மீண்டும் மீண்டும் இறைஞ்சுகின்றோம்.
வாழ்க!!! வாழ்க!!! வளமுடன்
பல பல பதவிகள் பெற்று.



உரிமையாளர்:
திரு.திருமதி சுகுமாரன்.

மில்லேனியம் றெஷ்ரோரன்ற் &
உல்லாசப் பயணிகள் விடுதி
76/60, இராமநாதன் வீதி (கம்பஸ் றோட்),
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2810, 0773031680

(38831)(24-14-45)

## 31ஆவது நாள் நினைவு அஞ்சலி



### திருமதி இராசா அன்னப்பிள்ளை (மணி)

தோற்றம் 1947-12-10
மறைவு 2005-07-16

*31 நாள் பறந்தோடிப் போனதம்மா ஆறாது ஆறாது*
*அம்மாவே உன் துயர் அழுதாலும் தீராதம்மா*
*உன் இதயத்தில் எம்மை வைத்து இன்பத்தை எமக்கீந்தாயே!*
*எம் உயர் வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருந்தாயே!*
*அம்மா எமக்கென்றே வாழ்ந்து எம்மை வளர்த்த தெய்வமே!*
*வையகம் விட்டு விண்ணுக்குச் செல்ல உன் மனம் எப்படித்*
*துணிந்ததம்மா? ஆறாது உன் துயரினால் துடிக்கின்றோம்*
*நாங்கள் நடமாடும் வீட்டில் படமாகிப் போனாய் அம்மா*
*எம் தெய்வமே! இறைவனடி சேர்ந்து 31 நாள் முடிந்தாலும்*
*எங்களால் உங்களை மறக்கமுடியவில்லை - அம்மா*
*எங்களை இந்த மேல் நிலைக்குக் கொண்டுவந்த உங்களை*
*எப்படி அம்மா மறக்கமுடியும்?*
*அன்போடும் பண்போடும் குடும்பத்தைக் காத்து நின்ற*
*உங்களை எப்படி அம்மா மறக்கமுடியும்?*

இன்று (15-08-2005) திங்கட்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நினைவஞ்சலி நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: கணவர் - **இராசா,**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உடன் பிறந்த சகோதரர்கள்.**

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.*

(38882) (24-14-45)

## உளத்தனைய உயர்வென உயர்ந்தோன்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமை யாளராகப் பதவி உயர்வு பெற்ற உயர்திரு. துரைசிங்கம் ரகு அவர்களைப் பாராட்டி, மேன்மேலும் உயர்வுகள் கண்டு சேவை புரிய வாழ்த்துகின்றேன்.

"கரும்பென இனிக்கும் முத்து நகை
இருப்பினும் வலிய உறுதி நிலை
மேதினி மாந்தரை மேவிடு சட்டவரம்பு
இடுக்கண் களைய நீட்டிடும் கரங்கள்
ரகு வெனும் இரவி எம்மிடை இலங்கிடும்
தொல்புரம் ஈன்ற துரையனார் மைந்தன்
நல்லூர் நாயகன் நம்மிடை என்றும்
நலமுடன் வாழ நகுலனின் வாழ்த்து"



உயர்திரு.
**துரைசிங்கம் ரகு**

அன்பின்
கந்தையா நகுலநாதன்
கந்தையா அன்சன் ஒப்பந்தகாரர்.

யாழ்ப்பாணம்.

(38879)(51-)


### கொடுப்பனவு

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதிதாக வீடு கட்டுவதற்கும் புனரமைப்புச் செய்வதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளில் 57 பேருக்கு கடந்தவாரம் 2ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தில் 85 பயனாளிகளுள்ளனர் என்றும் மிகுதி 28 பேருக்கும் இந்தக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 - 11 - 1917



உதிர்வு
18 - 07 - 1990

### அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்)

*திதி: 2005-08-15*

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**நல்லூர்.**

*(38878)(46-14-45-24)*

# மாகாண தடகளப் போட்டி முதல்நாள் 4 சாதனைகள்

யாழ்ப்பாணம்,ஓக.15

வடக்கு- கிழக்கு மாகாண மட்டத் தடகளப் போட்டிகளில் முதல்நாளில் 4 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

மாகாண மட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் யாழ். பொது விளையாட்டரங்கில் ஆரம்பமாகின. நேற்றும் போட்டிகள் இடம்பெற்றன.




முதல்நாள் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டார். மாகாண, மாவட்ட கொடிகள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து போட்டிகள் யாவும் ஆரம்பமானது. வடக்கு- கிழக்கு மாகாணக் கொடியைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் கணேஷ் ஏற்றி வைத்தார்.

மாகாண விளையாட்டுக் கொடியினை வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து மாவட்டக் கொடியை அந்த அந்த மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் ஏற்றினர்.

ஒலிம்பிக் சுடரினை கடந்த வருடம் தேசிய மட்டப் போட்டியில் குண்டுபோடும் நிகழ்வில் மூன்றாம் இடத்தினைப் பெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மா. பிரதீப்குமார் ஏற்றிவைத்தார்.

போட்டியாளர் சார்பாக கொரியாவில் நடைபெற்ற சர்வமதங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் கலந்து 400 மீற்றர், 800 மீற்றர் (20 வயது பிரி வின் கீழ்) ஓட்ட நிகழ்வில் தங்கப் பதக்கத்தினைப் பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வீரன் நிரஞ்சன் சத்தியப்பிரமாணம் எடுத்தார். இதனைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் போட்டிகளை சம்பிராதயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பநாள் போட்டியில் 4 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

சாதனை புரிந்தோர் விவரம் வருமாறு:-

✱ ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்வில் 1998 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் எஸ்.ரமணன் 7.06 மீற்றர் பாய்ந்து புரிந்த சாதனையை 7 வருடங்களின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரதீசன் 7.07 மீற்றர் துரத்தினைப் பாய்ந்து முறியடித்தார்.

✱ பெண்களுக்கான தட்டு ஏறிதல் போட்டியில் 2004 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சி.எம்.என்.ஆர். சந்திராசிறி 26.67 மீற்றர் தூரம் ஏறிந்து நிகழ்த்திய சாதனையை ஒரு வருடங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். தாரணி 29.30 மீற்றர் தூரம் எறிந்து முறியடித்தார்.

✱ பெண்களுக்கான குண்டு போடும் போட்டியில் 2004 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பி.எ.வி. சாமத்றிக்கா 8.93 மீற்றர் தூரம் எறிந்து நிகழ்த்திய சாதனையை ஒரு வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தர்சினி 9.74 மீற்றர் தூரம் எறிந்து முறியடித்தார்.

✱ பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 2002 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வி.செந்தினி 17.7 செக்கனில் புரிந்த சாதனையை மூன்று வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தயாளினி 17.5 செக்கனில் முறியடித்தார். (3-190)

## உழவர் ஒன்றிய வி.க. நடத்தும் போட்டிகள்

அமரர் இராச கதிரவேலு பத்மேஸ்வரன் ஞாபகார்த்தமாக உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டு கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 9 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிக்கு ஒரு கழகத்திலிருந்து 2 அணிகள் மட்டுமே பங்குபற்ற முடியும்.பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உழவர் ஒன்றிய விளையாட்டு கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## 5 விக்கெட்டுகளால் இந்து வெற்றி

'அஸ்ரா' கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்- 15 வயதுப் பிரிவினருக்கான - ஓர் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை யாழ். இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

நிலோசன் ஆட்டம் இழக்காமல் 48 ஓட்டங்களையும் நவதீபன், கேதீசன் முறையே 29, 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பிரியதர்சன் 4 விக்கெட்டுக்களையும் பவசுதன் 2 விக்கெட்டுக்களையும் உமாநரதரன், சங்கீதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பிரியதர்சன், கேததரன், சுதாகரன் ஆகியோர் முறையே 64, 25, 22 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

லவதீசன், நிலோசன் முறையே இரண்டு விக்கெட்டுகளையும் மனேஸ்ராஜ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-190)

முத்தரப்புத் தொடரில்

# புதிய விதிகளைப் பயன்படுத்தாதது ஏமாற்றமளித்தது என்கிறார் முரளி

" இலங்கையில் நடந்த முத்தரப்புத் தொடரில் ஐ.சி.சியின் புதிய விதிகளைப் பயன்படுத்தாதது ஏமாற்றத்தைத் தந்தது' என இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

'சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி.) சமீபத்தில் அறிவித்த ஒருநாள் ஆட்டத்துக்கான புதியவிதி முறைகள் ஆட்டத்தில் மேலும் பன்மடங்கு விறுவிறுப்பைக் கூட்டக்கூடியது. இதில் மாற்று வீரரை துடுப்பாட்டம், பந்து வீச்சு என இரண்டிலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது ஆட்டத்தில் முடிவையே மாற்றக்கூடியதாகவுள்ளது.

'பெரும்பாலும் இது இரண்டாவதாகத் துடுப்பாட்டம் செய்யும் அணிக்கே சாதகமாக அமையும். ஏனெனில் முதலில் பந்துவீசும் அணி, ஐந்து பந்துவீச்சாளர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னர் துடுப்பு செய்யும்போது ஒரு பந்து வீச்சாளருக்குப் பதிலாக மாற்று வீரரைக் களமிறக்கலாம்.

'இது முதலில் துடுப்புச் செய்யும் அணியால் முடியாது. பொதுவாகத் துடுப்பாட்டம் நன்றாகத் தெரிந்த ஒருவரைத்தான் மாற்று வீரராகத் தெரிவுசெய்வார்கள். இதனால் முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணி இக்கட்டான நேரத்தில் ஒரு பந்துவீச்சாளருக்குப் பதிலாக மாற்று வீரரைப் பயன்படுத்திக் கொண்டால், பந்துவீசும்போது சிக்கல் ஏற்படும். இதன்படி நாணயச் சுழற்சியை வென்றால் பெரும்பாலான அணிகள் களத்தடுப்பைத் தான் தெரிவு செய்யும் தவிர, புதிய விதி முறைகள் அணித் தலைவர்களுக்கு அதிக பளுவை அளிப்பதாகவுள்ளன.

'இந்தப் புதிய விதிமுறைகள் தற்போது நடந்த முத்தரப்புத் தொடரில் பயன்படுத்தாதது ஏமாற்றத்தைத் தந்தது. இத்தொடரில் இந்த விதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் போட்டி இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும்' என்றார். (க-3)

# ஆவ்ரோ - ஆசிய கிண்ணக் கிரிக்கெட்: உபாதையால் வாஸ், பதான் இல்லை

ஆவ்ரோ - ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான ஆசிய அணியில் உபாதை காரணமாக வேகப்பந்து வீச்சாளர்களான சமிந்த வாஸ், இர்பான் பதான் ஆகியோர் விளையாடமாட்டார்கள். அதேபோல் ஆபிரிக்க அணியில் அல்பி மோர்கல், பிளிங்நொட் ஆகியோரும் உபாதை காரணமாக விளையாடமாட்டார்கள்.

ஆசிய - ஆபிரிக்க கண்டங்களுக்கிடையே முதல் தடவையாக கிரிக்கெட் போட்டி ஒன்று நடக்கின்றது. 3 ஆட்டங்களைக் கொண்ட இத் தொடர் நாளைமறுதினம் தென்னாபிரிக்காவில் தொடங்குகின்றது. இந்தத் தொடருக்கான ஆசிய, ஆபிரிக்க அணிகள் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டன.

இதில் இலங்கையில் நடைபெற்று முடிந்த முத்தரப்புத் தொடரின் முடிவில் உபாதைக்குள்ளனதால் சமிந்த வாஸ், இர்பான் பதான் ஆகியோர் விளையாடவில்லை. இவர்களுக்குப் பதிலாக இந்திய வீரர்களான ஆஷித் நெஹ்ரா, ஸஹிர் கான் ஆகியோர் வாய்ப்புப் பெற்றனர்.


இதேவேளை, ஆபிரிக்க அணியில் இடம் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி வீரர் மோர்கல், ஸிம்பாப்வே வீரர் பிளிங்நொட் ஆகியோரும் உபாதை காரணமாக இப்போட்டியில் விளையாடவில்லை. இவர்களுக்குப் பதிலாக ஸ்டெய்ன், அதிரடி ஆட்டக்காரர் ஜஸ்டின் கெம்ப் சேர்க்கப்பட்டனர்.

இரு அணி வீரர்களின் விவரம் வருமாறு:

ஆசிய அணி: இன்சமாம் (அணித் தலைவர்), டிராவிட், ஷேவாக், சங்கக்கார, சனத் ஜயசூரிய, யுஹானா, அப்ரிடி, ரசாக், முரளிதரன், அஷ்ரபுல், மொர்டசா, கும்ளே, சொயிப் அக்தர், நெஹ்ரா, ஸஹிர்கான்.

ஆபிரிக்க அணி: கிரஹம் ஸ்மித் (அணித் தலைவர்), ஷோன் பொலக், டிப்பென்னார், டி வில்லியர்ஸ், கலிஸ், ஆஷ்வெல் பிறின்ஸ், மார்க்புட்சர், ஸொண்டகி, ருடோல்வ், நிக்கி போஜே, ஒன்டொவ், ஸ்டீப் டிக்கலோ, கொலின்ஸ் ஒபுயா, தோமஸ் ஒடோயோ, ஹீத் ஸ்டரீக், தைபு, ஸ்டெய்ன், ஜஸ்டின் கெம்ப். (க-3)





வடக்கு- கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் மாகாண மட்ட தடகள விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஆரம்பநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதை முதல் இருபடங்களிலும் யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட பயிற்றுநர் திருமதி றூபசிங்கம் மங்களவிளக்கினை ஏற்றுவதை மூன்றாவது படத்திலும் ஒலிம்பிக் சுடரினை பிரதீப் குமார் ஏற்றுவதை நான்காவது படத்திலும் போட்டியாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் நிரஞ்சன் சத்தியப்பிரமாணம் செய்வதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் போட்டியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளராக இருந்து தற்போது யாழ். பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள



# உயர்திரு. துரைசிங்கம் ரகு

அவர்களை மேன்மேலும் உயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு
காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

மக்கள் வங்கியின் மாண்புமிகு தலைவனாய்
மண்ணினிலே மாண்புறு மனிதனாய்
மக்கள் சேவையே மகேசன் சேவையென
மண்ணினிலே நிலைத்திடவே
மக்கள் நாம் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**யாழ்ரன் மல்ரி சென்ரர்**
**YARLTTON MULTI CENTRE**

No. 48, Kasthuriyar Road,
Jaffna. T.P.: 222 6330

இல.48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ரீ.வி, டெக், றேடியோ, பிலிம்றோள், கெசற் வகைகள், சுவர்மணிக்கூடுகள்,
கைக்கடிகாரங்கள், அன்ரனா வகைகள், அன்பளிப்புப் பொருள்கள் விற்பனையாளர்கள்.

(38337)/54-

# விஞ்ஞானியாகி இருக்காவிட்டால் ஐன்ஸ்ரைன் ஒரு பியானோ கலைஞர்

**2005 ஆம் ஆண்டு உலக பௌதிகவியல் ஆண்டு என்றும் ஐன்ஸ்ரைன் ஆண்டு என்றும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும், தூய - பிரயோக - பௌதிகவியல் கூட்டுறவு அமைப்பும் இணைந்து இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கின்றன.**

**'அகிலத்தின் ஆசான்' என வர்ணிக்கப்படும் விஞ்ஞானி ஐன்ஸ்ரைனின் 50 ஆவது சிராத்த தினத்தை முன்னிட்டே இந்தப்.பிரகடனம். அதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரையைத் தொடரைத் தருகிறார் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்.**

## ஐன்ஸ்ரைன் பற்றிய சில சுவையான தகவல்கள்

**ஐன்ஸ்ரைன் ஆண்டு சிறப்புக்கட்டுரை 4**

**நாகலிங்கம் சிவயோகன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

கடந்த இரு வாரங்களாக வெளிவந்த ஐன்ஸ்ரைன் ஆண்டுச் சிறப்புக் கட்டுரைகள் இரண்டும் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை அவர்களின் கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அக் கட்டுரைகள் வரிசையில் இவ்வாரம் ஐன்ஸ்ரைன் பற்றிய சில சுவையான தகவல்களைப் பார்ப்போம்.

ஐன்ஸ்ரைன் பௌதிகவியலில் தலைசிறந்த விஞ்ஞானியாக இருந்தாலும் அவரிடம் பல சிறப்பான குணங்கள் இருந்தன. அத்துடன் அவர் வாழ்க்கையிலும் பல விநோதமான நிகழ்வுகள் நடந்துள்ளன. ஐன்ஸ்ரைன் போலவே அந் நிகழ்வுகளும் உலகப் புகழ் பெற்றவையாகிவிட்டன.

ஐன்ஸ்ரைன் திறமையாக வயலின் வாசிக்கக் கூடியதொரு இசைப் பிரியர். தான் ஒரு விஞ்ஞானியாகியிருக்காவிட்டால் நிச்சயமாக ஓர் இசையமைப்பாளராக ஆகியிருப்பேன் என ஒருமுறை அவரே கூறியுள்ளார். ஐன்ஸ்ரைனின் தாயார் பௌலின் (Pauline) திறமையாக பியானோ (Piano) வாசிக்கக் கூடியவராக இருந்தார். அதனால்தான் ஐன்ஸ்ரைனிற்கும் இசையில் ஆர்வம் வளர்ந்திருக்க வேண்டும். ''நான் ஒரு சின்னப் பெண்ணாக இருந்தும் ஐன்ஸ்ரைனுடன் காதலில் வீழ்ந்ததே அவரிடமிருந்த வயலின் இசைத் திறமையால் தான்'' என ஐன்ஸ்ரைனின் இரண்டாவது மனைவி எல்ஷா (Elsa) கூறியிருந்தார். ஐன்ஸ்ரைன் வயலின் மாத்திரமல்ல பியானோவும் திறமையாக வாசிப்பார் என்றும் அவர் பௌதிகவியல் ஆராய்ச்சிகளின் போது ஆழமாக சிந்திப்பார் என்றும் அந்நேரங்களில் எப்போதும் பியானோ வாசிப்பார் என்று எல்ஷா கூறியுள்ளார். அத்துடன் அவரின் மகத்தான பல கண்டு பிடிப்புகளிற்கு இசையும் மிகவும் உதவியிருக்க வேண்டும் என பலர் நம்புகிறார்கள். உண்மையிலேயே ஐன்ஸ்ரைன் தனது 17ஆவது வயதிலேயே - அதாவது பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும் போதே - வயலின் நன்றாக வாசிக்கக் கற்றுக்கொண்டாராம்.

பௌதிகவியலில் ஐன்ஸ்ரைனால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் மிக முக்கியமானவையாக இருந்ததால் அவறிற்கு உலகப் புகழ் கிடைத்தது. ஆயினும் நிஜ வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் அவர் சரியாக நடக்கவில்லை என்றும் கூறுவர். உதாரணமாக ஐன்ஸ்ரைனின் முதலாவது மனைவி மீலிவா மேரிக்கு (MilevaMaric) ஐன்ஸ்ரைனை விட மூன்று வயது அதிகம் அவரும் ஒரு பௌதிகவியல் மாணவியாக இருந்தவர். இருவரும் சேர்ந்து படிக்கும் காலத்தில் ஒன்றாக சில ஆராய்ச்சிகள் செய்து அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். மீலீவாவின் பல திட்டங்கள் ஐன்ஸ்ரைனின் கண்டு பிடிப்புகளிற்கு உதவின என்று கூறுகிறார்கள். அத்துடன் ஐன்ஸ்ரைன் தனது மனைவியிடமிருந்து திட்டங்களைத் திருடித் தான் பாரிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டார் எனக் குற்றம் கூறுவோரும் உள்ளனர். அப்படியானால் அவர்களின் திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ மிலீவாவினால் ஏன் புதிய கண்டுபிடிப்புகள் எதனையும் மேற்கொள்ள முடியவில்லை என ஐன்ஸ்ரைனிற்கு ஆதரவானவர்கள் கேட்கிறார்கள். மிலீவா ஐன்ஸ்ரைனிற்கு பல வழிகளில் உதவியாக இருந்திருக்கலாம். அல்லது சில வேளைகளில் ஐன்ஸ்ரைனின் கணிப்பீடுகளைச் சரி பார்த்து இருக்கலாம் அல்லது முக்கியமான விவாதங்களில் பங்கேற்று இருக்கலாம். அதற்காக ஐன்ஸ்ரைன் அவரின் திட்டங்களைத் திருடினார் என்று கூறுவது பொருத்தமற்றதாகும்.

### முதல் குழந்தை

ஐன்ஸ்ரைன் தனது முதலாவது மனைவியான மீலீவாவிற்கு உண்மையுள்ள ஒரு கணவனாக இருக்கவில்லையென்றும் கூறுகிறார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணத்திற்கு முன்னரே லிசேள் (Liserl) என்றொரு பெண் குழந்தை பிறந்தது. அந்நேரம் ஐன்ஸ்ரைன் வெளியிடமொன்றிற்குச் சென்றிருந்தார். அவர் தனது பெண் குழந்தையைப் பார்க்காமலேயே அதை யாருக்கோ தத்துக் கொடுக்கச் சொல்லி மீலீவாவை வற்புறுத்தியதாகக் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் அப் பெண் குழந்தைக்கு என்ன நடந்தது என்ற விடயம் இன்று வரை யாரிற்கும் தெரியாது.

ஐன்ஸ்ரைன் - மீலீவா திருமணத்தின் பின் அவர்களிற்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஐன்ஸ்ரைனிற்கு அவரின் மச்சாள் எல்ஷாவுடன் (Elsa) காதல் பிறந்ததும் மீலீவாவை விவாகரத்துச் செய்தார்.

அதன் பின் அவர் தனது மகன்களைப் பற்றிக்கூட கவலைப்படாமல் வாழ்ந்தாராம். மேலும் இவரின் இரண்டாவது மகன் தனது தகப்பனைக் பிரிந்த கவலையில் மனநோயாளியாக நோய்வாய்ப்பட்டு இறந்த பொழுது அவரின் இறுதிச் சடங்குகளுக்குக் கூட ஐன்ஸ்ரைன் போகவில்லையாம். ஐன்ஸ்ரைனின் இரண்டாவது மகன் ஹன்ஸ் அல்பேர்ட் 1973ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி கலிபோனிர்யாவில் காலமானார். எவ்வாறாயினும் மீலீவாவுடன் விவாகரத்துப் பெற்ற போது செய்துகொண்ட ஒப்பந்தத்தை மதித்து அவரிற்கு நோபல் பரிசாக கிடைத்த பணம் அனைத்தையும் மீலீவாவிற்கே கொடுத்தார்.

### ஐன்ஸ்ரைனின் வசீகரம்

ஐன்ஸ்ரைன் எல்ஷாவை விரும்பி மணம் முடித்தாலும் சில வருடங்களின் பின் அவரின் நண்பர் ஒருவரின் மருமகளையும் (Betty Neumann) காதலித்தாராம். இவர்களின் தொடர்பு எல்ஷாவிற்குத் தெரிந்தபோதும் அவர் அதை எதிர்க்கவில்லையாம். இந்தக் காதலும் 1924 ஆம் ஆண்டு வரைதான் நீடித்ததாம். அத்துடன் 1936ஆம் ஆண்டு எல்ஷா இறந்த பின்னர் கூட ஐன்ஸ்ரைனிற்கு வேறும் பல பெண்களுடன் தொடர்பு இருந்ததாம். பெண்களின் தொடர்பினால்தான் ஐன்ஸ்ரைனால் இவ்வளவு பாரிய கண்டுபிடிப்புக்களை செய்ய முடிந்ததென்றும் சிலர் விவாதிப்பர். அதனால்தானோ என்னவோ நம்மாலும் ஐன்ஸ்ரைன் போல கண்டுபிடிப்புகளை செய்யமுடியாமல் இருக்கிறதோ தெரியவில்லை! எப்படியிருந்தாலும் இவ்வளவு பெண்களின் தொடர்பு எல்லோருக்கும் இலகுவில் கிடைத்துவிடாது. ஆனால், ஐன்ஸ்ரைனின் வசீகரத் தோற்றமும், புகழும்தான் பல பெண்களைக் கவர்ந்திருக்கவேண்டும்.

ஐன்ஸ்ரைனுக்கும் அவரின் முதலாவது மனைவி மீலீவாவிற்குமிடையில் பரிமாறப்பட்ட காதல் கடிதங்கள், ''அல்போட் ஐன்ஸ்ரைனின் சேகரிக்கப்பட்ட கடிதங்கள்'' (Collected Papers Of Albert Einstein) என்னுமொரு புத்தகமாக பிறின்ஸ்ரன் (Princeton) பல்கலைக்கழக பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் பல சுவையான, கிளுகிளுப்பான விடயங்கள் இருக்குமா என்று தேடினால், இல்லை! இக் கடிதங்களில் பெரும்பாலும் தனது ஆராய்ச்சி பற்றிய கருத்துக்களையே தனது மனைவியுடன் பரிமாறியுள்ளார். அதனால் தானோ என்னவோ அவர்களின் திருமண உறவு விவாகரத்தில் முடிந்ததோ தெரியவில்லை!

ஐன்ஸ்ரைனால் உருவாக்கப்பட்ட சிறப் புத் தொடர்பியல் (Spe -cial Relativity) கொள்கைகள் கூட ஹென்றிக் லோரன்ஸ் (Hendrik Lorentz), ஹென்றி போயின்றோ (Henri Poincare) போன்றோரின் கண்டுபிடிப்புகளில் இருந்து திருடப்பட்டவை என்று கூறுவார்கள். ஏனெனில் ஐன்ஸ்ரைனின் 1905 ஆம் ஆண்டு வெளிவந்த சிறப்புத் தொடர்பியல் பற்றிய கட்டுரைக்கும், 1904 ஆம் ஆண்டு வெளிவந்த லோரன்ஸ் இனதும், பொயின்கோ இனதும் கட்டுரைகளுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. ஆனால், ஐன்ஸ் ரைன்தான் அக் கட்டுரைகளைப்பார்க்கவில்லை என்று கூறியதுடன், தான் எழுதிய கட்டுரைகளிலும் அவற்றை உசாத்துணை நூல்களாகக் குறிப்பிடவில்லை.



ஐன்ஸ்ரைனும் மீலிவாவும் இரண்டாவது மகனுடன்

இதேபோலத்தான் ஐன்ஸ்ரைனின் பொதுத் தொடர்பியல் கொள்கையிலும் சிலர் சந்தேகப்படுகிறார்கள். ஐன்ஸ்ரைன் தனது பொதுத் தொடர்பில் கட்டுரையை சமர்ப்பிப்பதற்கு ஐந்து நாள்களிற்கு முன்னரே டேவிட் ஹில்பேர்ட் (David Hilbert) என்னும் விஞ்ஞானி பொதுத் தொடர்பியல் கொள்கையை ஆராய்ந்து முடித்திருந்தாராம். இருவரின் கண்டுபிடிப்புகளிலும் பல ஒற்றுமைகள் இருக்கின்றனவாம். ஆயினும் ஹில்பேர்ட்டின் கட்டுரையில் பொதுத் தொடர்பியலுக்குத் தேவையான புலச் சமன்பாடுகள் இருக்கவில்லை என்றும், ஆனால் ஐன்ஸ்ரைன் புதிய வெளி - நேர கேத்திரகணித முறையொன்றை உபயோகித்திருந்தார் என்றும் இந்த இருவரினதும் கட்டுரைகளை ஆரா ய்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

### இரண்டாவது மனைவி

ஐன்ஸ்ரைனின் இரண்டாவது மனைவி எல்ஷா அவரின் மச் சாள் ஆகும். இவர் கள் இருவரிற்கிடையிலுமான வயது வித்தியாசம் அதிகமாக இருந்தது. அவர் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் பொருத்தமற்ற விதமாக அலங்காரம் செய்து இருப்பாராம். அவரின்தலைமுடியை அவரே வெட்டிக் கொள்வாராம் அவரே தலைமுடியை ''எமது வீட்டில் கத்தரிக்கோல் இருக்கும் போது ஏன் தலைமயிர் வெட்டுபவர்களுக்கு பணத்தைக் கொடுத்து வீணாக்க வேண்டும்?'' எனக் கூறியுள்ளார்.



ஐன்ஸ்ரைன் பிறந்தவீடு

ஐன்ஸ்ரைன் பற்றி எல்ஷா கூறும் போது, ஐன்ஸ்ரைனிற்கு அவரின் பௌதிகவியல் கொள்கைகள் பற்றி சம்பந்தமில்லாதவர்கள் கேட்டால் பிடிப்பதில்லை என்றும் கூறியுள்ளார். அத்துடன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களிடம் ஐன்ஸ்ரைனிடம் பௌதிகவியல் கொள்கைகள் பற்றி எதுவுமே கேட்க வேண்டாம் என எல்ஷா அறிவுறுத்துவாராம். அத்துடன் ஐன்ஸ்ரைன் தன்னைப்படம் எடுப்பதையும், அவரின் படத்தை வரைய விரும்பும் ஓவியர்களிற்கு முன்னால் அமர்ந்திருப்பதையும் ஒருபோதும் விரும்பியதில்லையாம். ஐன்ஸ்ரைன் ஒருமுறை புகைவண்டியில் சென்று கொண்டிருக்கும் போது அவரின் முன் னால் இருந்த ஒருவர் நீண்ட நேரமாக ஐன்ஸ் ரைனை உற்றுப்பார்துவிட்டு இறுதியில் 'நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்' எனக் கேட்டுள்ளார். அதற்கு ஐன்ஸ்ரைன் தான் ஒரு ஓவியரின் மாதிரி (Model) என்று கூறினாராம். மேலும் ஐன்ஸ்ரைனிற்கு கையெழுத்திட்டுக்கொடுப்பதிலும் விருப்பம் இருந்ததில்லையாம். ஆயினும் ஒரு காலத்தில் தான் கையெழுத்திட்டுக் கொடுப்பதற்குப் பணம் அறவிட்டு, அப் பணத்தை வேறு பொது விடயங்களிற்குக் கொடையாகக் கொடுத்துள்ளார்.

ஒருமுறை ஐன்ஸ்ரைனின் இரண்டாவது மனைவி எல்ஷாவிடம் 'உங்களிற்கு ஐன்ஸ்ரைனின் தொடர்பியல் கொள்கை புரியுமா?' என அவரின் நண்பி ஒருவர் கேட்டுள்ளார். அதற்கு அவர் சிரித்துவிட்டு ஐன்ஸ்ரைனிற்கே அக்கொள்கை முழுமையாகத் தெரியாது எனக் கூறியுள்ளார். அத்துடன் ஐன்ஸ்ரைன் எப் பொழுதும் ஒரு கனவுலகில் சிந்தித்தபடி இருப்பார் என்றும், குடும்பத்துடன் சேர்ந் திருந்து சாப்பிட்டதே குறைவு என்றும் எல்ஷா கூறியுள்ளார். ஐன்ஸ்ரைனின் சாப்பாட்டைப் பெரும்பாலும் அவரின் படிக்கும் அறைக்கே கொண்டு போய் எல்ஷா கொடுப்பாராம். ஐன்ஸ்ரைன் ஒரு வார்த்தை கூட பேசாமல் சிந்தித்தபடி இருப்பாராம். பின் நீண்ட நேரம் கழித்து எல்ஷாவைக் கூப்பிட்டு ஆறிப்போன சாப்பாட்டை மீண்டும் சூடாக்கித் தரும் படி கேட்பாராம். ஐன்ஸ்ரைன் ஆழமாக சிந்தித்துக் கொண்டிருக்கும் போது யாரும் கதைப்பதை விரும்புவதில்லையாம். ஆனால் ஏனைய நேரங்களில் மிகவும் சாதாரணமாக, கலகலப்பாக எல்லோருடனும் பழகுவாராம்.

எல்ஷாவின் கழுத்தில் தந்தங்கள் கோத்த தங்கச் சங்கிலியொன்று எப்போதும் இருக்குமாம். அவரை அவரின் நண்பி ஒருவர் இந்தத் தந்தங்கள் எகிப்திலுள்ள யானைகளின் தந்தமா எனக் கேட்டுள்ளார். அதற்கு எல்ஷா 'இல்லை, இல்லை இவை எனது பிள்ளைகளின் விழுந்த பல்லுகள், அவை எனக்கு எகிப்திய யானைத் தந்தங்களை விட பெறுமதியானவை' என்று கூறியுள்ளார்.

ஐன்ஸ்ரைனிற்கு கிட்டத்தட்ட 51 வயது இருக்கும்போது விருந்தினர் ஒருவர் ஆங்கிலத்தில் ஏதோ வினாவியுள்ளார். அதற்கு 'எனக்கு ஆங்கிலத்தில் தெரிந்த ஒரே ஒரு சொல் மலசல கூடம் (Water Closet)' என ஐன்ஸ்ரைன் கூறியுள்ளார். அதற்கு அவ் விருந்தினர், 'பரவாயில்லையே மிக முக்கியமான சொல்லொன்றைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்' என்று கூற ஐன்ஸ்ரைன் மனம் விட்டுச் சிரித்தாராம்.

ஐன்ஸ்ரைன் சந்தித்துக் கதைத்தவர்களில் முக்கியமான ஒருவர் நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் ரவீந்திர நாத் தாகூர் ஆவார். இருவரும் 1930 ஆம் ஆண்டு சந்தித்திருக்கிறார்கள்.

(வளரும்)

*மிதிவெடி அகற்றப்பட்டதை அடுத்து*

# பெரியவிளான் தெற்கில் 25 வீடுகள் நிர்மாணம்

பெரியவிளான் கிராம அலுவலர் பிரிவில் மிதிவெடி அகற்றப்பட்ட பகுதியில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 25 வீடுகள் நிறுவப்படவுள்ளன.

பெரியவிளான் தெற்குப் பகுதி மக்கள் மிதிவெடி அபாயம் காரணமாக இதுவரை மீளக்குடியமரமுடியாமல் வேறு இடங்களில் இடம் பெயர்ந்து வசித்து வந்தனர்.

அண்மையில் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தினால் இப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றப்பட்டிருந்தன.

இதனையடுத்து இப்பகுதியில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புதிதாக 25 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் -

இதற்கான பயனாளிகள் தெரிவு நடைபெற்று வருவதாகவும் - வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

**ஓட்டோ சாரதி தேவை**

ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் உடையவரும், அனுபவம் வாய்ந்தவருமான ஓட்டோ சாரதி உடனடியாகத் தேவை. தொடர்பு: திட்ட முகாமையாளர்
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (8-44067)

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி குமாரசாமி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி குமாரசாமி அவர்கள் நேற்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - நாகம்மா தம்பதிகளின் புதல்வனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் பாலமுருகன் (ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), பாலமுரளி, பாலச்சந்தர் (பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவன் 2000 ஆம் ஆண்டு), பாலமுகுந்தன் (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), பாலகிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், கனகசுந்தரம் மற்றும் திருமதி விஜயரட்ணம் அம்பலவாணர் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலேசியா), இராசையா (கனடா), நவரத்தினம் (அமெரிக்கா), வள்ளியம்மை, இராஜேஸ்வரி, பரமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2005) திங்கட்கிழமை பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரிகைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (38888)(26.14.45)

## யாழ்ப்பாண நகரில் வர்த்தகத்துக்குரிய காணியும் கட்டடமும் விற்பனைக்கு

**காணி இலக்கம்: 155 மற்றும் 157 மானிப்பாய் வீதி**
**தற்போது சமுர்த்தி வங்கி இயங்கும் இடம்**
**(சிவன் கோயிலுக்கு அருகில்)**
காணி : நிலப்பரப்பு02 குளி 0.78
காட்சி அறை: 1,300 சதுர அடி (அண்ணளவாக)
இருமாடி கட்டடம்: 2,900 சதுர அடி (அண்ணளவாக)
2005 ஆகஸ்ட் 04 ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 09 ஆம் திகதி வரை முன் அனுமதியுடன் பார்வையிட முடியும்.
விலைகோரல் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முகவரியில் ரூபா 200/= செலுத்திப் பெறவேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விலைகோரல் விண்ணப்பங்கள் 2005 செப்ரெம்பர் 09 ஆம் திகதி மாலை 4.30 மணி அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு கோரலுடனும் மீளளிக்கப்படத்தக்க மேலதிக வைப்புப் பணமாக ரூபா 100,000/= செலுத்தப்படல் வேண்டும்.
*மேலதிக தொடர்புகளுக்கு அழைக்கவும்.*

**LIQUIDATORS**
**Home Finance Ltd,**
**C/o SJMS ASSOCIATES,**
**Restructure & Corporate Recovery,**
**Level-4, No:2, Castle Lane,**
**Colombo-04**

**விசாரணைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்:**
**குமார் அல்லது அபயசேகர**
**தொலைபேசி இல: 011 5364293 அல்லது 011 2597183**
**தொலைநகல்: 011 5364295**

## வலி.தென்மேற்கின் கலை, கலாசார விழா

வலிதென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகம் இவ்வருடத்திற்கான கலை, கலாசார விழாவை எதிர்வரும் 27,28ஆம் திகதிகளில் நடத்துவது என்று தீர்மானித் துள்ளது.

மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இரு தினங்கள் நடைபெறும் இக்கலை, கலாசார விழாவில் நாட்டுக் கூத்து, கிராமிய நடனம், நாட்டிய நாடகம், நாடகங்கள், இன்னிசை ஆகிய பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறவிருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பிரதேச செயலக பிரிவிலுள்ள கலைஞர்களும் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ-135)

## வான் தோண்டும் பணி ஆரம்பம்

பருத்தித்துறை முனை கடற்கரை வான் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பிரான்சிஸ் இரட்ணகுமார் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முனை தோப்பர் ஆலய வண.பிதா அருட்திரு.இருதயதாஸ் அடிகளார், யாழ்.திட்ட அமுலாக்கல் செயலகப் பணிப்பாளர் சு.பாலையா, வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் அன்பழகன், கங்கைஅழகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-70)

## ஓகஸ்ட் மாத வவுச்சருடன் ஓய்வூதிய அதிகரிப்பு

தென்மராட்சி,ஓக.15

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியம்பெறும் விதவைகள், அநாதைகள் ஆகியோருக்கு ஓகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சருடன் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படுகிறது.

2004 ஜனவரி தொடக்கம் இந்த ஓய்வூதிய அதிகரிப்புக் கொடுப்பனவு நிலுவையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

சில ஓய்வூதியர்களின் கோவைகளில் இந்த ஓய்வூதிய முரண்பாடுகளைச் சீர்செய்வதற்கான விவரங்கள் இல்லாமையினால் அவர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பை வழங்க முடியவில்லை என்றும் கூறப்பட்டது. அவ்வாறான விவரங்கள் வைத்திருப்பவர்களிடம் அதனைப் பெறுவதற்கே ஓய்வூதிய வவுச்சருடன் படிவம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் - அப்படிவத்தினைப் பூரணப்படுத்தி சமாதான நீதிவான் ஒருவரால் உறுதிப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-117)

## ஹெல உறுமயவின் ஐந்து கோரிக்கைகள்

நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஜனாதிபதி உடனடியாக ஐந்து விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

- தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சட்டவிரோத அமைப்பாகப் பிரகடனம் செய்ய வேண்டும்.
- அவசர காலச் சட்டத்தைப் பயங்கரவாதத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.
- நோர்வே மற்றும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்களை நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும்.
- விடுதலைப் புலிகளின் இரணைமடு விமானத்தைத் அயல் நாடுகளின் உதவியுடன் அழிக்க வேண்டும்.

ஆகிய ஐந்து விடயங்களை ஜனாதிபதி உடன் கவனமெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜாதிகஹெல உறுமய கேட்டுள்ளது. (ஐ-13)

## செயல்நூல் அறிமுக விழா

பாலர் கணிதம் செயல்நூல் அறிமுகவிழா இன்று மு.ப. 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வலி.தெற்கு சனசமூக நிலைய சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சூ.ஜெயராஜ் பிரதம விருந்தினராகவும் - யாழ்.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி கு.அஞ்சலீன், வலிகாமம் வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.நளினி ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர். நிகழ்வில் நூல் அறிமுகவுரையை ஏழாலை வடக்கு அ.மி.த. பாடசாலை அதிபர் சு.ஜெயராஜும் பதிலுரையை ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு.துரைசிங்கமும் நிகழ்த்துவார். (எ-149-203)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பர்களான
பாலமுருகன், பாலமுரளி,
பாலச்சந்தர், பாலமுகுந்தன்,
பாலகிருஷ்ணா ஆகியோரின்
அன்புத் தந்தை

### கனகசபாபதி குமாரசாமி

அவர்களின் பிரிவால் துயர்கொண்ட இதயங்கள் அனைவரோடும் நாமும் துயரத்தைப் பகிர்ந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பறாளாய் விநாயகனை வேண்டுகின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரதான வீதி,
சுழிபுரம். (388890)(26.14.45)

நவம்ஸ் தொலைத்தொடர்பு
நண்பர்கள், சுழிபுரம்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 704 |
| திகதி | 12-8-2005 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
5615820-5631720

லக்கினம் மிதுனம்

வெற்றி இலக்கங்கள்
**11 18 51 54**

ஜக்பொட் பரிசு
ரூபா. 41,33,700/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 49,19,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,52,019 | 10/- | 35,20,190/- |
| 2.இலக்கங்கள் | 32,294 | 20/- | 6,45,880/- |
| 1.இல லக்கினம் | 31,919 | 30/- | 9,57,570/- |
| 2.இல லக்கினம் | 2,974 | 100/- | 2,97,400/- |
| 3.இலக்கங்கள் | 878 | 500/- | 4,39,000/- |
| 3.இல லக்கினம் | 68 | 5,000/- | 3,40,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 100,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 41,33,700/- | - |
| | | மொத்தம் | 67,00,040/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 77,52,290/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 77,52,290/-
தொடர் இல. 4673942 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 5625461-6-17 |
| கொழும்பு | 5629372-5-70 |
| மொனராகலை | 5621841-1-27 |
| மட்டக்களப்பு | 5621405-8-34 |
| மாத்தளை | 5625964-3-88 |

## 13.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300488726 இலிருந்து
300506399 வரை

சீட்டிழுப்பு இல. 1632

வெற்றி எண்கள்
**21 29 57 64**
சுப்பர் எண் **05**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.36,99,100/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 36,99,100/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 472 | 1,000/- | 4,72,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,572 | 500/- | 7,86,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,747 | 40/- | 9,09,880/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,555 | 20/- | 4,31,100/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,24,044 | 10/- | 32,40,440/- |
| | | மொத்தம் | 79,74,420/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 84,74,420/- |

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 45,64,900/-**

தொடர் இல. 200527663 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 17 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலநறுவை | 300490565-9-46 |
| குருநாகல் | 3000495055-7-36 |
| கேகாலை | 300504578-9-28 |
| கண்டி | 300500088-9-94 |
| மாத்தறை | 300491163-2-70 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,ஓக.15

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலிப் பூசையும் அதனை அடுத்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறவுள்ளன.

இன்றிரவு ஆலய முன்றலிலுள்ள திறந்தவெளியரங்கில் யாழ். திருமறைக் கலாமன்றம், சில்லாலை திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் ''ஏகலைவன்'' என்ற நாட்டுக் கூத்தை மேடை ஏற்றவுள்ளது. அத்துடன், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(எ-135)

* * *

குருநகர்,ஓக.15

நாவாந்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கான நவநாள் ஆராதனைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் மாலை 7 மணிக்கு அன்னையின் திருச்சொரூபப் பவனியும் திருச்சொரூப ஆசீரும் நடைபெறவுள்ளன. (எ-51)

* * *

குருநகர்,ஓக.15

ஊர்காவற்றுறை மத்தி புனித மரியாள் ஆலயத்தில் புனித மரியாளின் விண்ணேற்புவிழா இம்மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் பங்குத்தந்தை அருட்திரு. சேவியர் ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலியும் புனித மரியன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

(எ-51)

## சந்நிதி ஆலயச் சூழலில் இன்று

வடமராட்சி,ஓக.15

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் ஆச்சிரம மண்டபத்தில் திருவிழாக்கால சிறப்பு நிகழ்வுகளை நடத்திவருகின்றனர்.

இதில் இன்று 15ஆம் திகதி திங்கட்கிழமை 'அருள்வாய் குகனே' எனும் தலைப்பில் ஆசிரியர் ஆ.சிவநாதனும், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை 'ஐம்புலன்களை வென்றார்' எனும் தலைப்பில் சிவத்திரு வ.குமாரசாமி ஐயரும் சொற்பொழிவாற்றுவர்.

(எ-173-203)

யாழ்ப்பாணம்,ஓக.15

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலத்தில் தினமும் மாலை 5.30 மணிக்கு அளவையூர் ஸ்ரீபாஸ்கர் இசைக் கதைக்குழுவினரின் 'கந்தன் கருணை' இசைக்கதை இடம்பெறும். (எ-203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந் திருவிழா கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 19ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத பூசைகள் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் பிற்பகல் 2 மணியளவில் ஸ்நபன அபிஷேக மும் அதனைத் தொடர்ந்து வரலட்சுமி விசேட பூசை, சுமங்கலி பூசை, வரலட்சுமி தோத்திரம், பிரார்த்தனை வரலட்சுமி காப்பு வழங்கல், வசந்த மண்டபப் பூசை, அம்பாள் வீதியுலா வருதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் வரலட்சுமி விரதம் நிறைவடையும். (எ-173-203)

* * *

மானிப்பாய்,ஓக.15

சங்குவேலி கலட்டி சித்தி ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களின் ஆசியுரையும் அளவெட்டி சீ.விநாசித்தம்பியின் அருளுரையும், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புரையும் இடம்பெறும். (எ-90-203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.15

மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-88-204)

## கிரிக்கெட்

வடமராட்சி மென்பந்து கிரிக்கெட் சங்கம் வடமராட்சி பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் இன்று மதியம் 2 மணியளவில் நெல்லியடி ம.ம.வி. விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் நெல்லியடி ம.ம.வி. அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி விளையாடவுள்ளது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசாவும் விசேட விருந்தினராக வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.பிரியனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-190)

## மரண அறிவித்தல்

### தவராசா சுகந்தன்

*(காசாளர், நகரசபை, வல்வெட்டித்துறை)*

இன்றைய உதயனின் 4ஆம் பக்கத்தில் வெளியான அன்னாரது மரண அறிவித்தலில் இறுதிக்கிரியைகள் நாளை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் என்றுள்ளது.

ஆனால், அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

*பலாலி வீதி, நல்லூர் பிரதேச செயலக முன் ஒழுங்கை, திருநெல்வேலி.*

**தகவல்: குடும்பத்தினர்.**


G.A.Q. பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

Ta. பா.பாலமுரளி | H.C. ஸ்ரீ | Eco:E.G. வரன்
Geo.K. கிரிதரன் | Phi.K.T. மோகன் | Log.K.T. மோகன்
Dra. M. சந்திரன் | Com. S. யசோ
Ma. T. தவசேகர் | Enver. K. கிரி | Eng.P. மதன்
P.Sc. பொன்.சந்துரு | His. சுஜிகரன்

திங்கள் மாலை, வெள்ளி காலை பதிவுகளை மேற்கொள்ளவும்.
(38865) (12-13-33) 19, 20, 21.08.2005 காலை 8.30
D.C.C.A. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு பாலசிங்கம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பாலசிங்கம் அவர்கள் நேற்று (14.08.2005) ஞாயிற்றுக் கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு ஆச்சி முத்து தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கனகம்மா, மற்றும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் கந்தையா, குலராசா (சுவிஸ்), அமுதராசா, பத்மநாதன், பரமேஸ்வரன், யோகேஸ்வரன் (டென்மார்க்), ரேணுகாதேவி, கனகேஸ்வரி, சுரேஸ்வரன் (ஜேர்மனி), சந்திரேஸ்வரன், அழகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2005) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோட்டைக்காடு, மல்லாகம்.* (38896) (12-13-33) *தகவல்: குடும்பத்தினர்.*

### வல்லிபுரம் நடுவில்



கரணவாய் மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் நடுவில் நேற்றுமுன்தினம் (13.08.2005) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - ஆத்தைப்பிள்ளையின் அன்பு மகனும், இராசாத்தியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (சுவிஸ்), சற்குணதேவி, செல்வதேவி, பாஸ்கரன், துளசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் கந்தையா தர்மராசாவின் (முன்னாள் 'ராஜி' ரெக்ஸ்ரைல் - நெல்லியடி - உரிமையாளர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2005) திங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூவரசம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்டான் ஏற்றம், கரணவாய் மேற்கு.* (சி-38341) (12-13-33) *தகவல்: குடும்பத்தினர்.*

### தருமலிங்கம் தையல்முத்து

*(மலேசியன் பென்சனியர்)*

உடுவில் தெற்கு பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த தருமலிங்கம் தையல்முத்து நேற்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் (இளைப்பாறிய மலேசியன் புகையிரத அதிபர்) அன்பு மனைவியும், Dr..தருமரத்தினம், தங்கமலர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி, தம்பித்துரை (இளைப்பாறிய மக்கள் வங்கிப் பிரதி முகாமையாளர்), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.சோபிதா, வாகீசன் (பொறியியலாளர்), பிறேமாநிதி (ஆசிரியை, சிந்மயபாரதி வித்தியாலயம், சுதுமலை) தபோநிதி (ஜேர்மனி), கிருபாநிதி, பிரபாகரன் (பொறியியலாளர் - U.K.), கிருபாகரன் (C.D.O. யாழ்.), யசோதரன் B.S.C. சத்தியப்பிரியா, விஜிதா, அபர்நாத், கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2005) திங்கட் கிழமை பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு, மானிப்பாய்.* (38898) (12-13-33) *தகவல்: தருமரத்தினம் (மகன்), தம்பித்துரை (மருமகன்).*


மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு
புதிய பாடத்திட்டத்தில் இரசாயனவியலில் புகுத்தப்பட்ட பகுதிகளிற்கான எதிர்பார்ப்பு வினாக்களை உள்ளடக்கியது.
ஆரம்பம்:- 17.08.2005 புதன்
இடம்:- NEW SCIENCE CENTRE (யாழ்நகர்)
(38829)
By. அன்பழகன் B.Sc.

NEW SCIENCE COLLEGE
மின்னியல்
Tue., Thu. 6.15 - 7.15 (a.m.)
ஆரம்பம்: 16.08.2005
By. M. கருணாநிதி
Paper Class Mon., Wed., 6.15-7.15 (a.m.)
(38897)

"கிறிஸ்துவுக்குப் புகழ்" விற்பனைக்கு
பரலோக மாதா திருவிழாவை முன்னிட்டு, எல்லா வகையான பூமரங்கள், கனிமரங்கள், அதற்குரிய சாடிகள் மற்றும் லவ்பேட்ஸ் என்பன தேவையான அளவு மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- செல்வம் விற்றாலிஸ்
35, கோயில் வீதி, நாவாந்துறை,
(38893) யாழ்ப்பாணம். T.P.:- 4590848

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவைசரளா மற்றும் பலர் நடித்த
பிரியசகி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(சி-44110)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ் (நீலம்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(சி-43380)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேல் நடித்த

சின்னா
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(சி-45163)

இசைக் கருவிகள்

சகலவிதமான இசைக்கருவிகளையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்

சாயி சங்கீதா
UG53, பீபள்ஸ் பார்க் கேஸ்வேர்க் வீதி, கொழும்பு-11
தொலைபேசி: 2384222 2445102
பக்ஸ்: 2445102

பலவர்ண நினைவுமலர் அட்டைகள் மற்றும் அழைப்பிதழ் அட்டைகள்
புதிய வடிவங்களில் பல வர்ணங்களில் அச்சிடப்பட்ட பிள்ளையார், சிவன்குடும்பம், முருகன், அம்மன் ஆகிய நினைவுமலர் அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம். (கொழும்பில் அச்சிடப்பட்டவை)
அத்துடன் பலவர்ணங்களில் அச்சிடப்பட்ட பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, புதுமனைப்புகுவிழா, திருமணம் போன்றவற்றுக்கான அழைப்பிதழ் அட்டைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
கூல் லெமனேற்றிங் A4 - 1/=
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
இல. 183, பலாலி வீதி, கோண்டாவில். T.P : 222 6722
E-Mail : sivaranjanam@hotmail.com

# கதிர்காமரைச் சுட்டுக் கொன்றவர்கள் புலிகளே என ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.15

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை விடுதலைப் புலிகளே சுட்டுக் கொன்றனர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கதிர்காமரின் கொலை தொடர்பாக நேற்றிரவு நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றை ஆற்றினார் ஜனாதிபதி. இரவு 10.45 மணி முதல் சுமார் 10 நிமிடங்கள் அவரது உரை இடம்பெற்றது.

அதில் அவர் தெரிவித்ததாவது:-

மறைந்த அமைச்சர் கதிர்காமரைச் சுட்டுக்கொன்றவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ள விடுதலைப் புலிகள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு செய்வது ஒப்பந்தமீறல் ஆகும்.

அரசு தீவிரவாதத்துக்கு ஒருபோதும் தலை வணங்கப் போவதில்லை. தேசிய பாதுகாப்பில் பின்னடைவுகள் ஏற்படவும் அது இடமளிக்கப்போவதில்லை - என்றார் சந்திரிகா. (க)

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றையும் ஆளுங்கட்சியின் ஒருதரப்பு ஜனாதிபதியிடம் முன்வைத்திருக்கின்றது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற அடிப்படையில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவிற்கே இந்தப் பொறுப்பு வழங்கப்படக்கூடுமென்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், ஏற்கனவே வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் என்ற வகையில் பொறுப்பை டிரோன் பெர்னாண்டோவிடம் வழங்கினால் அமைச்சர் கதிர்காமர் விட்ட இடத்திலிருந்து அவரால் சிறந்த சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியுமென்று ஜனாதிபதிக்கு நெருக்கமான சிலர் அவரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அரச சமாதான செயலகப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சிரேஷ்ட இராஜதந்திரியான ஜயந்த தனபாலவை இந்தப் பதவியில் அமர்த்த வேண்டுமென மற்றுமொரு தரப்பினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (க)

## புலிகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமர் கொலைசெய்யப்பட்டிதைக் கண்டித்து ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை உடன் தடைசெய்து அவர்களின் உறுப்பினர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும். அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் நோர்வே அனுசரணையாளர்களை இந்த நாட்டிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும். இரணைமடுவில் உள்ள புலிகளின் விமானத்தளம் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால், குண்டுகளை வீசி அதனை உடனடியாக அழித்தொழிக்கவேண்டும். எமது இந்தக் கோரிக்கைகளை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஓக.15

நேற்றிரவு இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் வெட்டுக்காயங்களுக்கு இருவர் இலக்காகினர்.

கோப்பாயைச் சேர்ந்த சுகுமார் (வயது-49) என்பவர் வீதியால் சென்றுகொண்டிருக்கும் போது இனந்தெரியாதோரினால் வெட்டப்பட்டார்.

மற்றொரு சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான ரஞ்சன் (வயது-33) என்பவரின் வீட்டில் புகுந்த திருடர்களை அவர் பிடிக்க முற்பட்டபோது திருடர்கள் அவரை வெட்டிவிட்டு தப்பிச்சென்றனர்.

இவர்கள் இருவரும் யாழ். மருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். (ஓ-ரி)

## போராளி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகக் கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் முறைப்பாடு செய்துள்ளார்.

அதிரடிப்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால் தாங்கள் மாற்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கத்துக்கு விளக்கினார். இந்த நிலைமை போராக வெடிப்பதற்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அனுமதிக்கக்கூடாது என்று அனுசரணையாளர்கள் என்ற வகையில் தாம் வேண்டுகோள் விடுக்கவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இன்று இலங்கைவரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனும் பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் நாளைமறுதினம் புதன்கிழமை வரை கொழும்பில் தங்கியிருப்பர். அக்காலப்பகுதியில் அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துப் பேசுவர்.

அமைச்சர் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக வரும் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரையும் நோர்வே அமைச்சர்கள் கொழும்பில் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்துப் பேசவுள்ளனர்.

நாளைமறுதினம் புதன்கிழமை நாடு திரும்பும் வழியில் லண்டன் சென்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த விஜயத்தின்போது நோர்வேப் பிரதிநிதிகள் வன்னி செல்லமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ரி)

# அம்பாறையில் தாக்குதல்கள்!

கல்முனைக்குடி,ஓக.15

அம்பாறை மாவட்டத்தில் நேற்றிரவு இடம்பெற்ற இருவேறு கிரனேட் வீச்சுச் சம்பவங்களில் ஐவர் காயமடைந்தனர்.

பாண்டிருப்பு, தளவட்டான் சந்தியில் அமைந்துள்ள பொலீஸ் சோதனைச் சாவடி மீது நேற்றிரவு 7.40 மணியளவில் கிரனேட் தாக்குதல் இடம்பெற்றது. இதில் பொலீஸார் இருவர் காயமடைந்தனர்.

மற்றைய சம்பவம் இரவு 9.30 மணியளவில் அக்கரைப்பற்றில் ஆர்.கே.எம். பாடசாலையின் முன்பாக இடம்பெற்றது. வீசப்பட்ட கிரனேட் வெடித்ததில் விசேட அதிரடிப்படைச் சிப்பாய், பொலீஸ் கான்ஸ்டபிள், ஊர்காவல் படையினர் ஒருவர் ஆகியோர் காயமடைந்தனர். (ஓ-ரி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய உறுப்பினர்கள் பலர் அலுவலகத்தில் இருந்துள்ளனர். எனினும், அவர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியாக அங்கு விரைந்த மட்டக்களப்பு பொலீஸாரும் கண்காணிப்புக் குழு அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டனர். அப்பகுதியில் அநாதரவாகக் கிடந்த சைக்கிள் ஒன்றையும் பொலீஸார் மீட்டனர்.

இந்தத் தாக்குதலையடுத்து மட்டக்களப்பு நகரில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நகருக்குள் வந்த மக்கள் நாலாபுறமும் சிதறியோடினர். சற்றுநேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. பொலீஸாரும் படையினரும் கூட்டாக இணைந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். புலிகளின் இந்த அலுவலகம் ஏற்கனவே மூன்று தடவைகள் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து பேரும் மோதரையில் ஐந்துபேரும், தெஹிவளையில் இருவரும் மற்றும் உலக வர்த்தக மத்திய நிலையம், கோட்டை போன்ற இடங்களில் இருவரும், களனி பகுதியில் இரு சிங்கள இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பம்பலப்பிட்டி, டேவிட்சன் வீதியில் ஐந்து பேரும் பல்மேரா அவனியுவில் ஐந்து பேரும், வேறு சில இடங்களில் சிங்களவர் உட்பட இருவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கதிர்காமரைச் சுட்டவர்கள் பயன்படுத்திய வீட்டின் உரிமையாளரான 58 வயதான லக்ஷ்மன் தளையசிங்கமும், பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட அவரது பாரியாரும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

கதிர்காமரைக் கொலைசெய்தவர்களைத் தேடும் பணியில் ஆயிரம் பொலீஸார் நான்கு பிரிவுகளாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப் படையினரும் முப்படைகளைச் சேர்ந்த உளவுப் பிரிவினரும் அவர்களுடன் இணைந்து செயற்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. வெளிநாட்டுப் புலனாய்வாளர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளதாகப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார். (ஓ-க-ரி)

## படைத்தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவேண்டிய திடீர் நடவடிக்கைகள் பற்றி கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எதற்கும் முகங்கொடுக்கும் வகையில் முப்படைகளையும் தயார்நிலையில் வைத்திருக்குமாறும் ஜனாதிபதி அங்கு உத்தரவிட்டுள்ளார். அவசரகால பிரகடனத்துக்கு அமைய அனைத்துப் படையதிகாரிகளையும் செயற்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (க)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று அங்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தும் ஏற்பாடுகளை சபாநாயகர் செய்திருந்தார். எனினும் மறைந்த அமைச்சர் கதிர்காமரது குடும்பத்தார் இதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லையெனக் கூறப்பட்டது. இதனால் அந்தத் திட்டம் கைவிடப் பட்டது.

வியஜராம மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள கதிர்காமரது பூதவுடல் அங்கிருந்து நேரடியாக இறுதிக்கிரியைகள் நடக்கும் சுதந்திர சதுக்கத்திற்குக் கொண்டு செல்லப்படவுள்ளது. (க)

## கதிர்காமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வர் என்பதால் பாதுகாப்பிற்கான முழு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்றுத் தெரிவித்தார்.

இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்து அரசியல் பிரமுகர்கள் இன்று அதிகாலை முதல் கொழும்பு வர ஏற்பாடாகியிருக்கிறது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி,வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரண் தலைமையிலான உயர்மட்டக் குழுவினரும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வர் என்று இந்திய அரசு நேற்று அறிவித்தது.

இதேபோல் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, தாய்லாந்து,சீனா,பிரிட்டன் உட்பட பல நாடுகளிலிருந்து அந்த நாடுகளின் அரசுகள் சார்பில் முக்கிய பிரமுகர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வார்கள் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஆகியோர் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள். அவர்கள் இன்று காலை கொழும்புவர ஏற்பாடாகியிருந்ததாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ரொம் க்னாப்ஸ்கொங் நேற்றுத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா ரொக்காவும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு முழுமையாக பாதுகாப்பை விமான நிலையத்திலிருந்து வழங்குமாறு ஜனாதிபதி நேற்று முப்படைத் தளபதிகளையும்பொலீஸ்மா அதிபரையும் பணித்திருக்கிறார்.

மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும், இஸ்ரேலுக்கான இந்தியத் தூதுவரும் ஜப்பான் நாடாளுமன்றக் குழுவொன்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள ஏற்பாடாகியிருந்தது. (க)

# மரண அறிவித்தல்கள்

## இராமப்பிள்ளை இராசையா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமப்பிள்ளை இராசையா அவர்கள் நேற்று (14.08.2005) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2005) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,-நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25, கோணாவளை ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(38902) (12-13-33)

தகவல்:
**இ.பிரதீபன்**
**(தீபன் - மகன்).**

## திருமதி அம்பிகாவதி விசாலாட்சி

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சீனியர்லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகாவதி விசாலாட்சி அவர்கள் நேற்று (14.08.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகாவதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சோதிடகலாநிதி ஐயாத்துரை - கமலாம்பாள் தம்பதியரின் மருமகளும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன், தபோஸ்வரன், நாகேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*2, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.:- 0776590389*

(38901)(12-13-33)

தகவல்:
**ஐ.அ.விக்கினேஸ்வரன்**
**(மகன்).**

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதிர்காமரின் கொலை இடம்பெற்றுள்ளதால் பாதுகாப்பு கேள்விக் குறியாகியிருப்பது குறித்தும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தச் சந்திப்பில் இருதலைவர்களும் தமது கவலையை வெளிப்படுத்தினர். ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்துவது குறித்து நீண்ட நேரம் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிவகாரம்தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுடன் அரசு விரைவில் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. அதேபோல்,அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருப்பதற்கும் அரசு தீர்மானித்திருக்கிறது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (க)


For Computer Repairs, Software Installation, Net 2 Phone Connections, Computer Hardware Classes at your Place
Contact No: 0773276374
(38827)

**இறுதி செயலமர்வு**
தரம்: 5 விசேட முன்னோடிப் பரீட்சையை பாடசாலைகளிலும், எமது அக்கடமியிலும் எழுதியவர்களுக்கான இறுதி செயலமர்வு. நாளை: 3.30 இற்கு
ஆசிரியர்: திரு.கணேசலிங்கம்
இடம்:- நல்லூர் சயன்ஸ் அக்கடமி
★ குறித்த நேரத்திற்கு வருவோர் மட்டும் அனுமதிக்கப்படுவர். விவரங்களுக்கு - 0773126807
(38895)

**SALE & REPAIRS**
* குளிர்சாதனப் பெட்டிகள்
* ஏயர் கொண்டிசன்கள்
திருத்துதல், Gas ஏற்றுதல் செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு 1:- ஓடர்களுக்குகுளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன் பெற்றுக் கொடுக்கப்படும்.
குறிப்பு 2:- வீடுகள்,ஸ்தாபனங்களுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
விபரங்களிற்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
NO 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
T.P :- 021 222 3335 0773 151183

**SLAS பரீட்சைக்கான நூல்**
உமாசங்கர் எழுதியது - விற்பனையாகின்றது.
(அ-44090)
துர்க்கா பொத்தகச் சோலை
பஸ் நிலையம் முன்பாக - சுன்னாகம்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
aat
Foundtion, Intermediate & Final
CHARTERED ACCOUNTANCY
FOUNDATION
SPECIAL OFFER
Special offer for aat intermediate & final.
Lectures will be Commenced on 20th August 2005
IPAS
199, பிரதான வீதி.
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
T.P: 0777 563294, 0777 270452
அலுவலக நேரம்:- புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு 9.00 am - 1.pm வரை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.